
# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**VOLUME - 3** **Reg NO.TNBIL/2016/70171** **ISSUE - 11**

**NOVEMBER 2019 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**




கர்த்தருக்குள் அன்பானவர்களே.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் எல்லாருக்கும் சமாதானம் உண்டாவதாக. கடந்த மாதங்களில் நடந்த அனைத்து ஊழியங்களையும் கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். கூட்டங்களில் சுகம் பெற்றவர்களும், மனந்திரும்பினவர்களும் ஏராளம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

நம் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி நம் நாட்டுக்கே பேரழிவை உண்டாக்கப்போகிறது என்று பற்பல தேசங்களிலிருந்தும் 108 பொருளாதார ஆராய்ச்சி நிபுனர்கள் நம்முடைய இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு எச்சரிப்பு கடிதத்தை நல்லெண்ண நோக்க அடிப்படையில் அனுப்பி இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய இந்திய அரசு இந்திய பொருளாதாரத்தைப்பற்றி மிக தவறான புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது. தங்களுடைய தவறை திருத்திக்கொள்ள முயலவில்லை. அதற்கு பதிலாக மேலும் தவறான பாதையில் நாட்டை நடத்திக்கொண்டு போகிறார்கள். சமீபத்தில் பொருளாதாரத்தில் தலை சிறந்தவர்கள் என்று 3 பேர் உலக **நோபல் பரிசு** பெற்றார்கள். நோபல் பரிசு பெற்ற மூன்று நபர்களும் **இந்திய பொருளாதாரம்** மிக மோசமான நிலைக்கு போய் கொண்டிருக்கிறது என்று கூறியதோடு மட்டுமல்லாமல் இனி முயன்றாலும், நடவடிக்கை எடுத்தாலும் இந்திய பொருளாதாரம் சீரடையும் அல்லது **சரிபடுமுத்தமுடியும் என்பதும் சந்தேகம்தான்** என்று கூறியிருக்கிறார்கள்.

அவ்வளவு ஏன் நம் இந்திய நிதி அமைச்சர் திருமதி **நிர்மலா சீத்தாராமன்** அவர்களின் **கனவரும்** பொருளாதார நிபுனருமான திரு. **ப்ரகல பிரபாகர்** அவர்கள் பகிரங்கமாக காவி கட்சியான (BJP) க்கு எச்சரிக்கை விடுவிடுத்துள்ளார். இதையாவது அவர் மனைவி திருமதி நிர்மலா சீத்தாராமன் அவர்கள் தன் கனவரிடம் பேசி கலந்து ஆலோசித்திருக்கலாம். அதையும் அவர் தவிர்த்திருக்கிறார் என்று உணர முடிகிறது.

திரு. மோடி அவர்கள் அனைத்து வல்லரசு நாடுகளையும் பகைத்துகொள்ளாத ராஜதந்திர வழியை அணுகினாலும் இந்தியாவிற்குள் அவர் செயல்படும் விதம் எங்களைப் போன்ற பத்திரிக்கையாளருக்கு பெரும் சந்தேகத்தை உண்டாக்குகிறது.

இந்தியாவின் அனைத்து முக்கிய நிர்வாக தலைமைகள் யாவையும் BJP கட்சி **தன் கட்டுப்பாட்டில்** கொண்டு வந்துவிட்டதாக பேசப்படுகிறது. **ரிசர்வ் பேங்க், தலைமை தேர்தல் ஆணையம்,** உயர் **நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், CBI தலைமை, வருமானவரித்துறை** இப்படி அனைத்து துறையும் காவி கட்சியின் தலைமை கையில் அடைக்கலமாகிவிட்டது என்று கூறப்படுவது உண்மை என்பது போல இந்தியாவில் சில சம்பவங்கள் உறுதியாக்குகிறது.

ஒரு சின்ன உதாரணம். நம் இந்தியாவின் யூனியன் பிரதேசமான **சிக்கீம் முதலமைச்சர் தமங்** என்பவர் மிகப்பெரிய ஊழல்வாதி. அவர் ஊழல் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு ஒரு வருடம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. உடனே அவர் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். சரியான ஆதாரத்துடன் பிடிபட்டதால் அங்கும் அவருக்கு சிறை தண்டனை உறுதி செய்யப்பட்டது. மறுபடியும் அவர் மறுமுறையீடு செய்து பார்த்தர். ஆனால் தண்டனை உறுதி செய்யப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டார். பெருத்த அவமானம் அடைந்தார். பல வருடங்கள் **முதல் அமைச்சர்** பதவியில் இருந்து ருசி கண்டவர். ஆனாலும் சிறை தண்டனையை பல கள்ளன்மார்களோடு கள்ளனாய் ஜெயிலில் தண்டனை அனுபவித்து விடுதலையாகி வெளியே வந்தார். அரசாங்க பணத்தில் ஊழல் செய்து ஜெயில் தண்டனை அனுபவித்தவர் ஆறு ஆணடுகளுக்கு எந்த தேர்தலிலும் நிற்கக்கூடாது. 2024ம் ஆண்டு வரை தேர்தலில் நிற்க முடியாது.

சமீபத்தில் **சிக்கீமில்** இடைத் தேர்தல் வந்தது. ஏற்கனவே சிறை சென்ற **தமங்** கட்சிதான் முழு பெரும்பான்மையுடன் இப்போது ஆட்சியில் இருக்கிறது.

இடைத்தேர்தலில் தானும் நின்று ஜெயித்து மறுபடியும் முதலமைச்சராக **தமங்** ஆசைப்பட்டதால் தேர்தல் ஆணையத்திடம் தேர்தல் **விதியை தனக்காக தளர்த்தி** தேர்தலில் நிற்க **சட்டத்தை திருத்தி** ஆறு வருடம் என்பதை **ஒரு வருடமாக்கினால்** தான் எலக்ஷனில் நிற்க முடியும் என்று விண்ணப்பித்தார்.

இந்த சமயத்தில் **சிக்கீமுக்குள்** கால் பதிக்க காத்துக்கொண்டிருந்தது காவி கட்சி (BJP) ஜெயில் தண்டனை அனுபவித்த **தமங்** அவர்களின் கட்சி தான் ஆட்சியில் இருப்பதை சாதகமாக்கி BJP கர்நாடகாவில் நுழைந்ததைபோல, தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரிக்குள் நுழைய ஆசைப்பட்டதைபோல் **சிக்கீமும்** தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர BJP ஆசைப்பட்டது.

அதற்கு ஜெயில் சென்று வந்த முன்னாள் முதலமைச்சர் **தமங்கின்** தயவு தேவை அவரின் கட்சி செல்வாக்கை பயன்படுத்தி **சிக்கீம்** ஆட்சியில் BJP நுழைய தீர்மானம் எடுத்தது.

தேர்தல் ஆணையம் என்பது **தன்னிச்சையானது.** அது உச்ச நீதிமன்றம் போல் **சுதந்திரமானதாகும்.** தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக இயங்காவிடில் எந்த தேர்தலும் சரியான முறையாக நடைபெறாது. ஆளுகிறவர்கள் சொல்கிறபடி செய்யும் அடிமைகளாவார்கள். குடியாட்சி என்பது நாளடைவில் முடியாட்சியாகிவிடும்.

!

இப்போது **தேர்தல் ஆணையம்** ஆளும் கட்சியான BJP சொல்வதை போல் கீழ்படிகிறதை கவனிக்கவேண்டும். சிறை சென்ற முன்னாள் முதல்வர் மறுபடியும் தேர்தலில் நிற்கவேண்டி **6 வருட தடையை ஒரு வருடமாக** சட்டத்தை **திருத்தி சட்டத்தையே மாற்றி** அமைத்து மறுபடியும் **தமங்கை** தேர்தலில் நின்று ஜெயிக்க வைத்தது என்ன அநியாயம்.! இதை கேட்பாரில்லையா என்கிறீர்களா?

- ☐ பஞ்ஜாப் மாநில முதல் அமைச்சர் பீந்த் சிங்கை **பல்வந்த சிங்** என்பவன் கொன்றான். அவனுக்கு **மரண தண்டனையை** நீதிமன்றம் வழங்கியது. கொலைகாரன் BJP (காவி கட்சியிடம்) ஒப்பந்தம் செய்து கொண்டபின் **மரண தண்டனையே** ரத்து செய்யப்பட்டுவிட்டது. **எப்படி இது சாத்தியமானது?** இன்றைக்கு இந்தியா முழுவதும் ஒவ்வொரு ஜெயிலும் **விசாரனை கைதிகளாக** பல லட்சம் பேர்கள் 20 வருடம் 30 வருடமாக இவர்களுக்கு **தண்டனையே அறிவிக்காமல்** விசாரனை கைதியாகவே ஜெயிலுக்குள் இருக்கிறார்கள். தாங்கள் **குற்றவாளியா இல்லையா**? என்பது தெரிந்தால் போதும் என்று அவர்கள் கெஞ்ஜி நிற்கிறார்கள். இரண்டுங்கெட்டான் நிலையில் ஆயுளின் 50 வருடங்களையும் தாண்டி ஜெயிலுக்குள் வாழும் இந்த கள்ளம் கபடமற்றவர்கள் கண்ணீர்வடித்துக்கொண்டிருக்க கொலை செய்து **மரண தண்டனை உறுதியான** பிறகு மரண தண்டனையை ரத்து செய்யும் மற்றொரு **விசேஷ தீர்ப்பு** எந்த நாட்டிலாவது இப்படி நடந்துண்டா? நம் **சுதந்திர ஜனநாயக** நாட்டில் இப்படிப்பட்ட **அநியாங்கள்** ஒன்றன்பின் ஒன்றாய் அரங்கேருகின்றன !
- ☐ பல பெண்களை **கற்பழித்த வழக்கில்** கையும் களவுமாய் பிடிப்பட்ட BJP கட்சியின் முன்னாள் அமைச்சர் **சின் மயானதந்தா** வழக்கு என்ன ஆனது? ஒன்றுமில்லாது போனது! கற்பழிக்கபட்ட பெண்களின் குடும்பத்தினர் காவி கட்சினரால் பயமுறுத்தபட்டு அடக்கி வைக்கபட்டுள்ளனர். கற்பழித்த முன்னான் அமைச்சர் இப்போது நாட்டில் சுதந்திரமாக உலாவி வருகிறார்.

இப்படி **காவி கட்சி ஆட்சி** பயங்கரமாக அசைக்கமுடியாத நிலையில் இருப்பதால் வெகு சீக்கிரம் **மத மாற்றச்** சட்டம், இந்துத்துவம், பொதுசட்டம் ஆகியவைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு **சுவிசேஷ ஊழியம், மிஷனரி** ஊழியம் **ஆலய ஆராதனை** யாவும் தடைபண்ணப்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை !

இந்திய மக்களுக்கு இருந்த **கடைசி நம்பிக்கை நீதிமன்றம்.** அதுவும் உச்சநீதிமன்றத்தை (சுப்ரீம் கோர்ட்டை) நாம் மிகவும் **நம்பிகொண்டிருக்கிறோம்.**

அந்த நம்பிக்கை அற்று போகும் விதத்தில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியின் சொல்கேளாத **நீதிபதிகள்** விபத்தில் **சாகடிக்கப்படுகிறார்கள்** என்று கேள்விப்படும போது நாம் கிறிஸ்தவர்கள் இந்தியாவின் இந்த நிலை மாற என்ன செய்யபோகிறோம் !

இப்போது கிறிஸ்தவ சபை மக்களாகிய நாம் நம்மையே கெடுத்துக்கொண்டு நம் **சபைகளின் நிர்வாகத்தை நீதிமன்றத்தின்** கையில் கொடுத்துவிட்டு **திருநெல்வேலி டையோசிஸ்** போன்று **சாட்சியிழந்து** நிற்பது எத்தனை வேதனைக்குறிய விஷயம். இதுபோல **தலை குனிந்து நிற்கும் நிலை** வேறு எந்த திருமண்டலத்துக்கும் வரவேண்டாம். இப்படிப்பட்ட சாட்சியிழந்த நிலையில் நாம் எத்தனையாய் ஜெபித்தாலும் கர்த்தர் நம் ஜெபத்தை கேட்க மாட்டார். ஜெபிப்போம்.

வாசகர்களாகிய உங்கள் **காணிக்கைகளுக்கும்**, **ஜெபத்துக்கும்** மிக்க நன்றி கூறுகிறேன்.

**Dr. புஷ்பராஜ்**

## ஊழிய விவரங்கள் ஊழிய புகைப்படங்கள்

**அன்னிய பாஷையைகுறித்து தொடர்ந்து** கடந்த மாதங்களாக ஜாமக்காரனில் நான் எழுதிக்கொண்டு வருவதால் நடந்து முடிந்த ஊழிய விவரங்கள் புகைப்படங்கள் வெளியிடமுடியவில்லை .

**நன்றி**

ஜாமக்காரன் பத்திரிகைக்காகவும் சுவிசேஷ ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து NEFT மூலமாகவும் DD காசோலை, M.O மூலமாகவும் **தொடர்ந்து காணிக்கைகளை** அனுப்பி உதவி செய்துகொண்டுவரும் குடும்பங்களுக்காகவும். விசுவாசிகளுக்காகவும் நாங்கள் மனமார்ந்த நன்றி கூறுகிறோம்.

என் ஊழியத்தை ஜெபத்தில் தாங்குகிற விசுவாசிகள், ஊழியர்கள் யாவருக்காகவும் மனதார நன்றி கூறுகிறேன். நானும் உங்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

\- ஜாமக்காரன்

## Mob.: 9894261333

இந்த கைபேசி எண்ணை குறித்துக்கொண்டு என்னோடு ஆலோசனை பெற அல்லது ஜெபிக்க வேண்டுமானால் மேலே குறிப்பிட்ட மொபைல் நெம்பரில். **உங்கள் பெயர்,** ஊர், உங்கள் **கைபேசி நெம்பர்** ஆகியவற்றை **SMS** செய்தால் நான் ஊழியம் முடித்து என் வீட்டுக்கு திரும்பும் போது நீங்கள் SMS செய்த உங்கள் கைபேசியோடு **நானே தொடர்பு கொண்டு உங்களோடு பேசுவேன்.** ஜெபிப்பேன். ஆலோசனையும் கூறுவேன்.

# அன்னிய பாஷை குழப்பம் 3

## ஜாமக்காரன் வெளியீடு



ஸ்தாபகர்-ஆசிரியர்

*வெளியிடுபவர்:* **Dr. புஷ்பராஜ்,**

சேலம்-5. தமிழ்நாடு

கடந்த முறை இரண்டாம் அத்தியாயத்தின் முடிவில் 39, 40 பக்கங்களில் கிறிஸ்து பூமியில் வாழ்ந்த காலத்தின் உபதேசம், கிறிஸ்து மரித்தபின் அதே உபதேசம் எப்படி மாறுகிறது என்பதை நான்கு சம்பவங்கள் மூலமாக அறிவித்தேன்.

அந்த சம்பவங்களை எதற்காக குறிப்பிட்டேன் என்றால் சுவிசேஷ புத்தகத்தில் இயேசு கூறினார். - **அவியானவர்** எனக்கு வேண்டும் என்று நீங்கள் கேட்டால் **பிதாவானவர்** நிச்சயம் **ஆவியானவரைத்தான்** கொடுப்பார் என்ற இந்த குறிப்பிட்ட **சம்பவத்தை** பலர் சுட்டிக்காட்டி இயேசுவே அப்படி கூறியதால் நாம் ஆவியானவரை **ஜெபத்தில் அழைக்கலாம் என்றும்** ஆவியானவரே என் **மேல் இறங்கும்** என்றும் வேண்டிக்கொள்ளலாம் என்றும் சிலர் தவறாக உபதேசிக்கிறார்கள். கிறிஸ்து **பூமியில் இருந்தபோது** கூறிய **உபதேசத்துக்கும்** - கிறிஸ்து உயிர்தெழுந்தபின் **புதிய ஏற்பாட்டு சபை** உருவானதற்கு பின் கூறிய **உபதேசத்துக்கும்** உள்ள வித்தியாசத்தை விளக்கவே அந்த சம்பவங்களை விவரித்தேன்.

### இப்போது வரங்களை பற்றி (GIFT) அறிந்துகொள்வோம்

கடந்த அத்தியாயத்தில் (அக்டோபர் மாத ஜாமக்காரனில்) **வரங்களில் உள்ள வித்தியாசங்களை** பக்கம் 38ல் வாசித்தோம். ஒவ்வொரு வரமும் தனித்தன்மை உடையது. பவுல் எழுதும்போது **வேறொருவனுக்கு** என்ற வார்த்தையை ஒவ்வொரு **வரத்தை** குறிப்பிடும்போதும் எழுதுகிறார். அதன் அர்த்தம் எல்லா வரங்களையும் ஒருவனுக்கே **கொடுப்பதில்லை** என்பதை அறியமுடிகிறது.

1 கொரி. 12:4-11 இந்த வசனங்களை வசிக்கும்போது **வரங்கள்** (GIFT) (பரிசுகள்) கர்த்தர் **கொடுப்பது ஆகும்.** அதை நாம் **யாரும் கேட்கக்கூடாது.** எனக்கு நாளை பிறந்தநாள் வருகிறது எனக்கு ஏதாவது பரிசு கொண்டு வாருங்கள் என்று நாம் யாராவது கேட்போமா? அப்படி கேட்பது நாகரீகம் அல்லவே !

இதன் அடிப்படையில்தான் சபையில் உள்ள எல்லாரும் **அன்னிய பாஷை** பேச பவுல் அனுமதி தரவில்லை. **வேறொருவனுக்கு** பற்பல பாஷைகளை பேசும் வரம் அருளப்படுகிறது. இதில் **வேறொருவனுக்கு** என்ற வார்த்தையை கவணியுங்கள். அதன் அர்த்தம் **எல்லோருக்கும்** அல்ல என்பதாகும். இப்படி தெளிவாக ஒவ்வொருவனுக்கும் **வித்தியாசமான வரங்களை** ஆவியானவர் கொடுக்கிறார். அதனால்தான் பவுல் **எல்லாருமா அன்னிய பாஷை** பேசுகிறார்களா? (1 கொரி. 12:30) என்று கேட்கிறதையும் இந்த இடத்தில் கவணிப்பது முக்கியம்.

எந்தெந்த **வரம்** யார் யாருக்கு கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறாரோ அவர்களுக்குதான் கிடைக்கும். **இடத்திற்கேற்றார்போல்** குறிப்பிட்ட இடத்துக்கு எந்த வரம் தேவையோ, அந்த வரத்தை அங்கு ஊழியம் செய்யும் நபருக்கு கொடுப்பார். வேறு இடத்தில் **தீர்க்கதரிசன வரம்** தேவையானால் **அதே நபருக்கு** அந்த வரத்தை அளித்து உபயோகிப்பார். இதுதான் கர்த்தருடைய ஒழுங்காகும். வரங்களை **ஜெபத்தினாலோ. உபவாச ஜெபத்தினாலோ** கேட்டு பெற்றுக்கெள்ளவே முடியாது. ஏமாந்து போகாதீர்கள !

குறிப்பு: மறுபடியும் உங்களை ஞாபகப்படுத்துகிறேன். பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபைக்கு எழுதும் கடிதம் (நிருபம்) கொரிந்துவில் உள்ள **சபைக்காகவும்,** சபைக்குள்ளே இருக்கும் **விசுவாசிகளையும் மனத்தில் வைத்தே இந்த நிருபத்தை எழுதுகிறார்.** ஆகவேதான் கூறுகிறேன் கொரிந்து சபைக்கு என்று எழுதிய நிருபங்களில் உள்ள விஷயம் மற்ற எந்த சபைக்கும் பொருந்தாது.

சரி மறுபடியும் **வரங்கள்** விஷயத்துக்கு வருகிறேன். கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் வரங்களின் வித்தியாசங்களைப்பற்றி விவரிக்கின்றார். அதை குறித்து சிறு குறிப்பை மேலே எழுதினேன் ஆனாலும் கொரிந்து சபைக்கு எழுதப்பட்ட நிருபங்களில் உள்ள விஷயம் மற்ற எந்த சபைக்கும் பொருந்தாது.

சரி மறுபடியும் **வரங்கள்** விஷயத்துக்கு வருகிறேன். கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் வரங்களின் வித்தியாசங்களைப்பற்றி விவரிக்கின்றார். அதை குறித்து சிறு குறிப்பை மேலே எழுதினேன் ஆனாலும் மறுபடியும் எழுதுகிறேன். அந்த 12ம் அதிகாரத்தில் **வேறொருவனுக்கு** என்ற வார்த்தையை **எத்தனை முறை** உபயோகிக்கிறார் என்பதை கவணியுங்கள். அதன் அர்த்தம், எல்லாருக்கும் ஒரே விதமான வரங்களை கர்த்தர் கொடுப்பதில்லை என்பதாகும்.

கர்த்தர் எனக்கு மொத்தம் **9 வரங்களை** கொடுத்திருக்கிறார் என்று சிலர் பெருமையாகவும், பொய்யாகவும் கூறுவதை கேட்டிருப்பீர்கள். அப்படி கூறிய நபரில் முக்கியமானவர் மறைந்த சகோ. DGS தினகரனும் ஒருவர் ஆவார். ஏன் மரித்த அவர் பெயரை இங்கு குறிப்பிடுகிறேன் என்றால்

அவர் ஒரவர் மட்டுமே வெளிப்படையாக கர்த்தர் தனக்கு **9 வரங்களையும்** கொடுத்திருக்கிறார் என்று தன் புத்தகத்தில் எழுதியும், பிரசங்கத்திலும் பகிரங்கமாகவும் குறிப்பிட்டார் என்பதை எல்லோரும் அறிவார்கள்.

அந்த காலத்தில் அவர் School of Evangalism (Power Ministry) என்ற பெயரில் 15 நாட்கள் பயிற்சி கொடுத்தார். அப்படிப்பட்ட அவரின் பயிற்சிகூடத்தில் பயின்றவர்கள்தான் சகோ. மோகன் C. லாசரஸ், பால் தினகரன்' அனேக நாட்களுக்குபின் ஏஞ்ஜல்TV சாது சுந்தர் செல்வராஜ் அவர்களும் ஒருவர் ஆவார்.

ஆரம்பத்தில் சாது சுந்தர் செல்வராஜ் அவர்கள் ஊழிய பயிற்சிபெற்றது பாளையங்கோட்டை சகோ. ஜான் ரபிந்திரநாத் அவர்களிடத்தில் ஆகும். சகோ. ஜான் ரபீந்திரநாத் அவர்களிடம்தான் **பரலோகம்** போய் வருவது குறித்த **பொய்யான உபதேசத்தை** கற்றுக்கொண்டு அவரைவிட மேலே ஒரு படிபோய் பரலோகத்திலேயே கமிட்டி மீட்டிங் அமைத்து அடிக்கடி பரலோகம் போய் வரும் **பொய்களை** அள்ளி வீசினார். **சாது சுந்தர் செல்வராஜ்** அவர்களின் கதை தனிக்கதை ஆகும். அது இப்போது வேண்டாம்.

சகோ மோகன் C. லாசரஸ் அவர்கள் **ஜெபத்தில் பெயர்களை அழைக்கும்** பொய்யான ஊழியத்தை சகோ. DGS. தினகரனிடமிருந்து கற்றுக்கொண்டது ஆகும்.

சகோ. DGS தினகரன், சகோ. மோகன் C. லாசரஸ், சகோ. ஜான் சாமுவேல், சகோ. ஜவஹர், சகோ. ஜட்சன் ஆபிரகாம், சகோ. ஸ்டீபன், சகோ. ஆலன்பால் இன்னும் ஏராளமான ஊழியர்களும், பெந்தேகோஸ்தே **பாஸ்டர்மார்களும்** சொல்லும் வெளிபாடுகள், தீர்க்கதரிசனங்கள், **ஜெபத்தில் பெயர் அழைப்பது, வியாதிகளின் பெயரை** ஜெபத்தில் கூறுவது, கை வைத்தால் **கீழே விழுவது,** ஊதினால் **விழுவது** இப்படிப்பட்ட பொய்யான **மேடை காட்சிகளை** இவர்கள் செய்ய **ஊற்றும் காரணமும் எது தெரியுமா**? இவர்கள் பேசும் **அன்னிய பாஷையே** அல்லாது வேறுஇல்லை. இவர்கள் பேசும் **அன்னிய பாஷை** பொய் ஆனதினால் அதை தொடர்ந்து இவர்கள் நடப்பிக்கும் **அற்புதங்களும்** மேலே வாசித்த **அடையாளங்களும்** யாவும் **பொய்யாய்** மாறுகிறது.

இந்த இரகசியம் மக்களுக்கு விளங்குவதில்லை. வேதத்தை முறைப்படி வாசித்து வசனத்தின் அடிப்படையில் ஜீவிப்பவர்களுக்கு மட்டும்தான் இவர்களையும் இவர்கள் பொய்களையும் **அடையாளம் காண முடியும்.** சிலர் இவர்கள் பேசுவது அற்புதங்களை செய்வது **பொய் என்று** அறிந்தாலும் அதை வெளியே சொல்லமாட்டார்கள். வெளியே சொல்ல பயப்படுவார்கள். அதற்கு காரணம் இந்த ஊழியர்களை மதிக்கும் கிறிஸ்தவ மக்களின் கோபத்துக்குள்ளாவார்கள். குறிப்பிட்ட **ஊழியர்களைப்பற்றி** விமர்சித்தால்' விமர்சிப்பவர்கள் வீட்டிலேயே அவர்கள ஒதுக்கப்படுவார்கள். **சபையிலும்** ஒதுக்கப்படுவார்கள்.

இவர்களின் **பொய்** செயல்களை **ஊழியர்கள் யாராவது** விமர்சித்தால் அவ்வளவுதான். அந்த **ஊழியர்களுக்கு** அனுப்பும் **காணிக்கைகளை** நிறுத்திவிடுவார்கள். இந்த பயத்தினால்

விவரம் அறிந்த **ஊழியர்களும்** இவர்களின் **தவறான பொய் கிரியைகளை** குறித்து உண்மை அறிந்தாலும் வாய்திறக்க மாட்டார்கள்.

இவர்களின் **அன்னிய பாஷை** பொய்யானதால் இவர்கள் கூறும் வெளிபாடு, **தீர்க்கதரிசனம்** யாவும் **பொய்யாய் மாறுகிறது.**

## மூவரணி உடைந்தது

கடந்த வருடத்துக்குமுன்வரை சகோ. **மோகன் C. லாசரஸ்,** சாது சுந்தர் செல்வராஜ், **வின்செண்ட் செல்வகுமார்** இந்த மூன்று பேரும் **ராஜஸ்தான் மார்வாடிகளைப்போல** தரையில் மெத்தை விரித்து உருண்டைதிண்டுகளில் கைகளை ஊன்றியபடி **பைபிளுக்குபதில் வின்செண்ட் செல்வகுமாருக்கு** கிடைத்த தீர்க்கதரிசனம் என்று கூறி அந்த தீர்க்கதரிசனங்களை **ஒரு புஸ்தகமாக்கி** அந்த புத்தகத்தில் உள்ளதை தியானிப்பார்கள். அந்த புஸ்தகத்தில் வின்செண்ட் செல்வகுமார் **தீர்க்கதரிசனம் போன்ற கட்டுகதைகளை தானே எழுதியதை** வாசிக்க அதை பைபிளை தியானிப்பதுபோல மேலே குறிப்பிட்ட மூன்று பேரும் அதற்கு விளக்கத்தை கூறி ஒருவர் பின் ஒருவர் அதை பகிர்ந்துகொள்வார்கள். அந்த **பொய் தீர்க்கதரிசன** புஸ்தகத்தில் வின்செண்ட் செல்வகுமார் எழுதிய பொய் தீர்க்கதரிசனங்களை ஒன்றன்பின் ஒன்றாய் வாசிக்க அதற்கு சகோ. மோகன் C. லாசரஸ்தான் விளக்கம் கூறுவார்.

அந்த புத்தக **விவரங்களே** ஒரு **பொய்.** அந்த **பொய்க்கு** மோகன் C. லாசரஸ் ஒரு **பொய் விளக்கம் கூறுவார்** பாருங்கள். அதை பார்த்த உண்மை விசுவாசிகள் வாயிலும் வயிற்றிலும் அடித்து அழுவதைப்போல் தாங்கள் வேதனைபட்டதாக எனக்கு அறிவிப்பார்கள். ஏராளமானவர்கள் மோகன் C. லாசரஸ்க்கு அதைக் குறித்து அறிவுரை வழங்கினார்கள், **கடிதங்கள்** அவருக்கு எழுதினார்கள். **ஏஞ்சல் TV** சாது செல்வராஜுடன் சேராதீர்கள் என்றும் அந்த **ஏஞ்சல் TV நிகழ்ச்சியில்** நீங்கள் அவர்களுடன் உட்கார வேண்டாம் என்றும் எத்தனையோ பேர் கெஞ்ஜினார்கள். அதற்கு சகோ. மோகன் C. லாசரஸ் வெளியரங்கமாகவும், பகிரங்கமாகவும் அதே **TV** நிகழ்ச்சியில் கூறியதென்ன தெரியுமா?

அன்பானவர்களே ! நான் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள கூடாது என்றும், **ஏஞ்ஜல் TV** சாது செல்வராஜ் அவர்களுடன் **சேரக்கூடாது** என்றும் **பலர் என்னை எச்சரித்தார்கள். இப்போதும் எச்சரித்துக்கொண்டே இருக்கிறார்கள்.** அதையும்மீறி நான் ஏன் இவர்களுடன் ஐக்கியம் வைத்தேன் தெரியுமா? **என் ஆண்டவர்** ஒரு நாள் தரிசனமாகி **ஆவியானவர் மூலமாக** என்னோடு **பேசினார்,** பைபிளில் எழுதப்படாத பல விஷயங்களை **தீர்க்கதரிசனமாக** அறிவித்திருக்கிறேன். நீ **அவர்களுடன் இணைந்து** அதற்கான தீர்க்கதரிசன விளக்கங்களை ஏஞ்ஜல் **TV மூலமாக** உலகுக்கு விவரித்து சொல் என்று **தெளிவாக என்னிடம் கூறியபடியால்** நாங்கள் மூவரும் கூடி இந்த நிகழ்ச்சிகளை நடத்துகிறோம் என்றார். ஆனால் நடந்தது என்ன ?

சில மாதங்களுக்குள்ளேயே சாயம் வெளுத்தது. வின்சென்ட் **செல்வக்குமார் அவர்களின் தீர்க்கதரிசன** புத்தகம் பொய் என்பது மட்டுல்ல இவர்களோடு சேர்ந்தால் வேறு **சில அரசாங்க பிரச்சனைகளுக்குள்ளே அகப்படுவோம் என்று மோகன் C லாசரஸ்** அறிந்ததால் உடனே அந்த கூட்டணியை உடைத்துக்கொண்டு வெளியேறினார். **மூவர் அணி** தனித்தனியாக பிரிந்தது. அதன்பின் **வின்சென்ட் செல்வக்குமார்** என்ன ஆனார் என்று தெரியவில்லை! சகோ. மோகன் C. லாசரஸ் பிரிந்து போனதால் **ஏஞ்ஜல் TV** சாது சுந்தர் தனிமைப்படுத்தப்பட்டார். தனியாக நின்றாலும் சாது சுந்தர் கோடீஸ்வரர். மற்ற இருவர் தன்னைவிட்டு விலகியதை குறித்து சாது செல்வராஜ் அவர்கள் இதுவரை தன் TV யில் அவர்கள் பிரிந்த காரணத்தைக்குறித்து ஒரு வார்த்தை கூட பேசவில்லையே! இதற்குபினனால் **வேறொரு பெரிய பிரச்சனை** உண்டு. அதுதான் இவர்கள் பிரிந்துபோக பிரதான காரணமாகும்.

இப்போது கேள்வி என்ன ?

சகோ. மோகன் C லாசரஸ்க்கு கர்த்தர் தரிசனமான விவரத்தை கூறும்போது சகோதரன் **உபயோகித்த வார்த்தை** என்ன தெரியுமா? **கர்த்தர் தெளிவாக என்னிடம் பேசினார்** என்பதாகும். அடிக்கடி அவர் **தெளிவாக** என்ற வார்த்தையை உபயோகிப்பார். அப்படியானால் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் மிகத் தெளிவாக இந்த இருவரோடு சேர்ந்து அவர்கள் எழுதிவைத்த தீர்க்கதரிசனத்தை உலகம் அறிய கூறு என்பதாகும்.

அப்படி கூறின **தெய்வம்** தன் வாக்கை **மாற்றுவாரா?** யோசியுங்கள்! ஒருவேளை இப்படி இவர்கள் சமாளிக்கலாம். **எசேக்கியா ராஜா** செத்துப்போவார் என்று கர்த்தர் கூறினார் என்று கூறிய தீர்க்கதரிசி விவரத்தை ராஜாவிடம் கூறிவிட்டு புறப்பட்டுவிட்டார். உடனே எசேக்கியா ராஜா கர்த்தரிடம் உயிர் பிச்சை கேட்டான். இப்போது இங்கு என்ன நடக்கிறது என்பதை கவனியுங்கள். தீர்க்கதரிசி ராஜாவிடம் மரண விவரம் கூறி அரண்மனையைவிட்டு வெளியேருவதற்கு முன் கர்த்தர் மறுபடியும் அதே **தீர்க்கதரிசியிடம்** ராஜா என்னிடம் அழுதபடியால் அவன் **ஆயுளை நீட்டிகொடுக்கிறேன்** என்பதை ராஜாவிடம் கூறு என்கிறார். இதுதான் தேவ ஒழுங்கு.

இதில் இந்த **இரண்டாம் பகுதிதான்** மோகன் C லாசரஸ் விஷயத்தில் **நடக்கவில்லை.** அந்த (ஏஞ்ஜல் TV நபர்கள் இருவரோடும் இனி இணைந்து நிகழ்ச்சிகளை நடத்து என்று கூறிய கர்த்தர் அதன்பின் ஏன் **இவர்களோடு சேர கூடாது என்பதற்கான காரணத்தையும்** கர்த்தர் சகோ மோகன் C லாசரஸ் அவர்களிடம் கூறவில்லை? அதை வெளியரங்கமாக மக்களுக்கு அறிவிக்கவும் இல்லை! ஏன் ? அதனால்தான் நான் கூறுகிறேன். இந்த இருவரோடும் **சேர்ந்து நிகழ்ச்சிகளை நடத்து** என்று கர்த்தர் தன்னோடு **தெளிவாக** பேசினார் என்ற TVயில் மோகன் C. லாசரஸ் கூறியது **பொய்** என்று நாம் கூறுவதில் என்ன தவறு? **மனம்மாற தேவன் ஒரு மனுஷன் அல்ல.** அப்படி மனம் மாறினால் கர்த்தர் அதை அறிவிக்காமல் இருக்கமாட்டார். இப்படி நிறைய உதாரணங்கள் வேதத்தில் உண்டு.

**அன்னிய பாஷை** பரிசுத்த ஆவியானவரின் **வரங்களை** குறித்து எழுதும்போது சமபந்தம் சம்பந்தமில்லாமல் **இந்த** குறிப்பிட்ட **ஊழியக்காரர்களைக்குறித்து** ஏன் திரும்ப திரும்ப எழுதுகிறீர்கள்? என்று நீங்கள் கேட்கலாம்.

இந்த பிரச்சனையே **பொய்யான அன்னிய பாஷையிலிருந்து**தானே ஆரம்பிக்கிறது! மக்கள் எல்லோரும் இவர் நல்லவர்கள், சாதுவானவர்கள், ஜெபிப்பவர்கள் ஜெபத்தில் இவர் மற்றவர்களுக்காக **அழுவார்கள்** என்றெல்லாம் இவர்கள் புகழப்படுகிறார்கள். ஆனால் **எங்களைப் போன்றவர்களுக்குதான்** தெரியும் இவர்கள் **பொய்** பேசுகிறார்கள் என்பது !

☐ பரிசுத்த ஆவியானவரின் பெயரில் **எத்தனை பொய் தீர்க்கதரிசனம்** கூறுகிறார்கள். சமீபத்தில் நடந்த **இந்திய தேர்தலில்** திரு. மோடி அவர்கள் **தோற்பார்,** காங்கிரஸ் **ஜெயிக்கும்** என்றார்கள். சகோ. மோகன் C லாசரஸ, தம்பி பால் தினகரன் அவர்களோடு இன்னும் பல ஊழியர்கள் இப்படித்தான் கூறினார்கள். நடந்தது என்ன? திரு. மோடி அவர்கள் தோற்க வேண்டும் எனறு அயிரக்கணக்கான மக்கள் கூடின கூட்டத்தில் அழுது ஜெபித்தார்களே ! அந்த தவறான ஜெபத்தை கர்த்தர் கேட்கவில்லை. இவர் கூறிய **தீர்க்கதரிசனங்களையும்** கர்த்தர் **பொய்யாக்கினார்.**

**மோடி** அவர்கள் தோற்கவேண்டும் என்று எத்தனை இடத்தில் இவர்கள் உபவாச ஜெப கூட்டம் நடத்தினார்கள். மோடி அவர்கள் தோற்பதின் மூலமாக கர்த்தாவே நீர் நீதியை செய்கிறவர் என்று நாடு அறியட்டும் என்று கூறி, அந்த பிசாசின் கூட்டத்தை அழித்துவிடும். என்றெல்லாம் அழுதார்களே! இத்தனை பேர்கள் மோகன் C. லாசரஸ்சுடன் சேர்ந்து ஜெபித்தும் ஏன் தெய்வம் அந்த ஜெபத்தை அலட்சியப்படுத்தினார். அவர்களின் கூக்குரலுக்கு ஏன் கர்த்தர் பதில் அளிக்கவில்லை ? அது அவர்கள் செய்த பிழையான ஜெபம் ஆகும். கிறிஸ்தவர்கள் ஒரு நாளும் அப்படி ஜெபிக்ககூடாது.

## அன்னிய பாஷை விவரங்களைக்குறித்து இன்னும் நான் வசனத்தின் விளக்கத்தை கூறவில்லை.

இது சம்பந்தமாக விசுவாசிகளிடையே எழும் அனேக **சந்தேகங்களுக்கு** இப்போது **விளக்கம்** அளித்துக்கொண்டுவருகிறேன். இவர்கள் கூறும் தவறான **போதனைகள்,** தவறான **உதாரணங்களுக்கெல்லாம்** நான் விளக்கம் கொடுத்துவிட்டால் அதன்பின் வேத வசன விளக்கத்தை நான் எழுதும்போது அன்னிய பாஷை - பரிசுத்தாவியானவரைப்பற்றி அப்போதுதான் தெளிவாக நீங்கள் அறிந்துகொள்ளமுடியும்.

**கேள்வி : -** எங்கள் சபையில் ஜெபத்தில் ஆவியில் நிறைந்து சபை மக்கள் ஜெபிக்கும்போது திடீரென்று அதிகபடிப்பு இல்லாத ஒரு விசுவாசி **எபிரேய மொழியில்** அன்னிய பாஷை பேசினார். சபை நிசப்தமானது. திடீரென்று சபையிலுள்ள மற்றொரு நபர் அதற்கான விளக்கத்தை கூறினார். கூறி முடித்தவுடன் சபை மக்கள் மிகவும் ஆனந்தத்தில் கூத்தாடினார்கள். ஆண்டவரை ஏகோபித்த சப்தத்தில் துதித்து பாஷை பேசி மகிழ்ந்தார்கள்.

இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அவர் பேசிய பாஷை **அன்னிய பாஷை** இல்லையா?

☐ இதே போல மற்றொரு நபர் கேட்ட கேள்வி அவர் AOG சபை விசுவாசி. அவர் தன் சபையில் ஒருவர் கூலி வேலை செய்கிறவர், எழுதப்படிக்க தெரியாதவர். ஆனால் ஒரு நாள் ஜெப வேளையில் அவர் கைகளை தட்டி துள்ளிக்குதித்து சுத்தமான **ஆங்கிலத்தில்** பேசினார். அவருக்கு வெகு அருகில் அமர்ந்திருந்த நான் ஆங்கிலத்தில் MA பட்டம் வாங்கினவன். அந்த நபர் பேசின ஆங்கில வார்த்தை தவறில்லாமல் பேசியது எனக்கே ஆச்சரியத்தை உண்டாக்கியது. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

**பதில் :-** இப்படி நிறைய கேள்வி கடிதங்கள் email மூலமாக எனக்கு வந்துள்ளது. இதை வாசிக்கிற நீங்களே ஒரு கேள்வியை கேட்டுப்பாருங்களேன். நீங்கள் குறிப்பிட்ட உங்கள் சபையில் யாராவது **எபிரேயர்கள் இருக்கிறார்களா?** கர்த்தர் அந்த நபரை எபிரேய பாஷையில் ஏன்பேச வைக்க வேண்டும்? அந்த **எபிரேய பாஷைக்கு** வியாக்கியானம் கொடுத்தவர் கல்லூரி பேராசிரியர். **எபிரேய பாஷையை** நன்கு அறிந்தவர். ஆகவே அவர் அதை மொழிபெயர்த்தார்.

எல்லாம் சரி ! சபை மக்கள் அனைவரும் பேசும் தமிழ் மொழியில் ஆராதனை நடந்து கொண்டிருக்கும்போது அங்கு **எபிரேய மொழியில்** பேசும் அவசியம் என்ன ? சபைக்கு அதில் என்ன செய்தியிருக்கிறது? இதற்கு உங்கள் கடிதத்தில் விளக்கம் இல்லையே? ஏன்? பேராசிரியரான நீங்கள் அதற்கு மொழிபெயர்ப்பு செய்தீர்கள! உங்கள் மனசாட்சியின்படி நீங்கள் கூறியது நம்பும்படி இருக்கிறதா? சபையில் அந்த நபர் பேசிய எபிரேய மொழியில் கூறப்பட்ட செய்தி எபிரேய மொழி தெரிந்த உங்களுக்காக கொடுக்கப்பட்ட செய்தியா? சபைக்கு கொடுக்கப்பட்டதா? உண்மையை கூற வேண்டுமென்றால் அந்த நபர் பேசிய **எபிரேய மொழியும்** உண்மையல்ல. அதற்கு மொழிபெயர்ப்பு செய்த உங்கள் மொழிபெயர்ப்பும் உண்மையல்ல?

ஆவியானவர் முட்டாள் அல்ல! தேவையில்லாத இடத்தில் தேவையில்லாத மொழியில் அவர் இப்படி பேசவே மாட்டார் என்பது என் அபிப்ராயம். என் அபிப்ராயம் மட்டுமல்ல, வேதத்திலும் அதற்கு ஆதாரம் இல்லை. எனக்குள்ளும் ஆவியானவர் உண்டு.

☐ அடுத்த நபரின் கடிதமும் ஏறக்குறைய உங்களை போன்றதுதான் பள்ளிக்கூடம் சென்று படிக்காதவர். எழுதப்படிக்க தெரியாத கூலிவேலை செய்யும் ஒரு தொழிலாளி AOG சபை ஆராதனையில் ஜெப நேரத்தில் ஆவியில் நிரம்பி கைகளைதட்டியபடி **சுத்தமான ஆங்கில பாஷையை** பேசினார் என்று எழுதியுள்ளார். இதுவும் பேராசியர் எபிரேய பாஷையை மொழிபெயர்த்த கதையை போன்றதுதான்.

இதையெல்லாம் ஒரு வக்கீல், தான் வாதாடும் நபரை குற்றமற்றவர் என்று நிரூபிக்க செய்யும் முயற்சிபோல அமைந்துள்ளது. இது அன்னிய பாஷை உண்டு என்பதை நிரூபிக்க தங்கள் சபையில் பேசும் அன்னிய பாஷையை ஆவியானவரின் செயல் என்பதை உறுதிபடுத்த செய்யப்படும் தவறான முயற்சியாகும்.

**கேள்வி :** அன்னிய பாஷை **பேசுவதை தடைபண்ணாதிருங்கள்** என்று பவுல் குறிப்பிடுகிறாரே? 1 கொரி. 14:39

பதில் : ஏற்கனவே ஆரம்பத்தில் குறிப்பிட்டதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். இந்த நிரூபம் இந்த வசனம் **யாருக்கு சொல்லப்படுகிறது**? என்று கவனிக்கவேண்டும். இது **கொரிந்து சபையில்** உள்ள 16 பாஷைக்காரர்கள் அடங்கின சபை ஜனங்களுக்காக சொல்லப்ட்டது. யூதர்கள் பெரும்பாலும் உள்ள கொரிந்து சபையில் புற ஜாதிகளும் **மற்ற பாஷைக்காரர்களும்** இணைந்து ஆராதித்து வந்தனர். ஆராதனை சமயத்தில் **மற்ற பாஷைக்காரர்கள்** சாட்சி சொல்லவோ, **வசனத்தை** குறித்து கேள்வி கேட்கவோ பகிர்ந்துகொள்ளவோ ஆசைப்பட்டால் அவர்களுக்கு பேச முன்னுரிமை கொடுக்கப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டிருப்பார்கள். அப்படிபப்ட்ட சூழ்நிலையில் **மற்ற பாஷை** (அன்னிய பாஷை) **பேசுபவர்களை** தடைபண்ண வேண்டாம் என்று பவுல் ஆலோசனை கூறுகிறார். இது ஆவியில் நிறைந்து பேசும் பாஷை என்று இப்போது சிலர் கூறி குழப்புகிறார்களே. அது அந்த பாஷையல்ல !

**கேள்வி : அன்னிய பாஷை** இப்போதுள்ள **சபைக்கு கொடுக்கப்பட்டதல்ல** என்று எழுதியிருக்கிறீர்களே! வேத வசனம் எல்லா காலத்துக்கும் உரியது. **புதிய ஏற்பாட்டில்** சொன்ன எல்லா காரியங்களும் **எல்லா காலத்துக்கும்** பொருந்தும்தானே! அப்படியிருக்க புதிய ஏற்பாட்டிலிருந்து குறிப்பிட்ட சில வசனங்களை மட்டும் நமக்கானது என்று எப்படி எடுத்துக்கொள்ள முடியும் ?

**பதில் :-** நீங்கள் குறிப்பிட்டதுபோல வேத வசனம் எல்லா காலத்துக்கும் எல்லா சபைக்கும் உரியதுதான் என்றாலும் சில குறிப்பிட்ட ஆலோசனைகள் குறிப்பிட்ட **அந்த சபைக்கு மட்டுமே** பொருந்தும் உதா. **இளம் பங்காளர் திட்டம்** பரிசுத்த ஆவியானவரின் திட்டம் அல்ல . அதை உற்சாகப்படுத்தாதிருங்கள் என்று மட்டும் நான் எழுதியிருந்தால் அது யாரை பற்றியோ எழுதியிருக்கிறார் என்று பலர் நினைப்பார்கள்.

ஆனால் அதே சமயம் **இயேசு அழைக்கிறார்.** சகோ. DGS தினகரன் அவர்கள் அறிமுகப்படுத்தின ஒரு குழந்தைக்கு 2000/- வாங்கும்படி கரத்தர் சொன்னதாக பொய் சொன்னதிட்டமாகும். ஆகவே ஒருநாளும் ஜெபத்துக்கு 2000/- வாங்க ஆவியானவர் சொல்லமாட்டார். இது **ஜெபத்தை விலைக்கு விற்கும்** திட்டம் என்று **குறிப்பிட்டு நான் எழுதியதால்** நீங்கள் குறிப்பிட்டது இவரை பற்றிதானா? நான் வேறு யாரைப்பற்றியோ என்று நினைத்தேன் என்று கூறியவர்கள் எத்தனைபேர்கள் தெரியுமா? **பெயரை** குறிப்பிட்டு **ஸ்தாபனத்தின்** பெயரை குறிப்பிட்டு எழுதிய உடன்தான் பலருக்கு அது விளங்கியது. இன்றைக்கும் பலர் டியூப்லைட் மாதிரிதான் இருக்கிறார்கள்.

அதுபோலவே புதிய ஏற்பட்டில் எழுதப்பட்டது எல்லாம் **எல்லா காலத்துக்கும்** பொருந்தும். ஆனால் **எல்லாருக்கும் பொருந்தாது.** ஆகவேதான் பவுல் 1 கொரி. 2:13ல் நாங்களோ மனுஷ ஞானத்தில் இதைபேசாமல் பரிசுத்த ஆவியானவரால் **ஆவிக்குறியதை - ஆவிக்குறியதோடு** சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறோம் என்கிறார்கள். வேதத்தில் ஆவிக்குறிய அல்லாத விஷயங்களும் இருக்கிறது. இதை நாங்கள் எடுத்து கூறாமல் **ஆவிக்குறியதை மட்டும்** தெரிந்தெடுத்து அதை மற்ற ஆவிக்குரிய வசனத்தோடு ஒப்பிட்டு காண்பிக்கிறோம் என்கிறார்.

ஆகவே புதிய ஏற்பாட்டில் உங்கள் ஆத்துமாவுக்குப் பிரயோஜனமானவற்றை மட்டும் எடுத்து தியானித்து ஆவிக்குரிய வாழ்க்கையை வளர்த்துங்கள்.

கொரிந்து சபையில் உள்ள பாஷை பிரச்சனை வேறு. எந்த சபையிலும் இல்லாததால் **அன்னிய பாஷை** குறித்து ஒரு வார்த்தைகூட பவுலோ. மற்ற சீஷர்களோ தங்கள் நிரூபங்களில் எழுதவில்லை. அதுமாத்திரமல்ல வேதத்தில் வேறு எந்த நிருபங்களிலும் எழுதப்படவில்லை என்பதை அறிய வேண்டும்.

**கேள்வி : பெந்தேதேகாஸ்தே** சபையில் பேசும் **அன்னிய பாஷை** போலியானது என்று நீங்கள் எப்படி சொல்லலாம்? உலகில் **எங்கோ ஒரு மூலையில்** யாரோ பேசும் **பாஷையாககூட அது** இருக்கலாமே?

**பதில் :** உங்கள் கேள்வியிலேயே உங்கள் அறியாமை எவ்வளவாய் உள்ளது என்று விளங்குகிறது. உலகில் **எங்கோ ஒரு மூலையில்** வாழும் **யாரோ ஒருவர்** பேசும் மொழியை ஏன் ஐயா ஒரே பாஷையில் பேசும் உங்கள் ஆராதனையில் பேச வேண்டும். நீங்கள் குறிப்பிடும் உலகின் **மூலையில் இருக்கும் அந்த நபரை தேடி** அவரிடம் அல்லவா பேச வேண்டும். அந்த உளரலை இங்கு ஏன் பேச வேண்டும ?

AOG சபையில் மூத்த பாஸ்டரும் வேதாகம கல்லூரியில் படிப்பிக்கும் நல்ல வேத ஞானம் பெற்றவருமான பாஸ்டர் ராஜாமணி (மதுரை) அவர்கள் அவர் எழுதிய புத்தகத்தில் **டொக் டொக்** இது கூட **ஒரு பாஷை** என்று உங்களுக்கு தெரியுமா? இதுவும் **அன்னிய பாஷைதான்.** இந்த **டொக்** என்பது கேட்க தமாஷாக இருக்கலாம். ஆனால் அதுவும் உலகின் **எங்கோ ஒரு மூலையில்** பேசப்படும் பாஷையாக இருக்கலாமே ! என்று எழுதியிருக்கிறார்.

இதை வாசிக்கும்போது அழுவதா! சிரிப்பதா! என்று தெரியவில்லை. கேள்வி கேட்ட நீங்களாவது விவரம் அறியாததால் அப்படி கேள்வி கேட்டீர்கள். ஆனால் பாஸ்டர்களை உருவாக்கும் வேதாகம கல்லூரி விரிவுரையாளர் மதுரையில் ஒரு பெரிய AOG சபைக்கு பாஸ்டராக பணி செய்பவர். AOG சபையிலேயே சிறப்பான கன்வென்ஷன் பிரசங்கியார். ஒரு சிறு பிள்ளைதனமான **டொக் டொக்கை** அன்னிய பாஷை என்கிறாரே! என்னத்தை சொல்ல! நல்ல அனுபவம் உள்ள பாஸ்டர்தான். ஆனால் தான் சார்ந்த **சபைக்கும்,** சபை **உபதேசத்தும் துரோகம் செய்யாமல்** இருக்க இப்படி உளரியிருக்கிறார். அவருக்கே தான் எழுதியது தவறு என்ற மிக நன்றாகத் தெரியும். இப்படித்தான் இன்று பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் எல்லாரும் ( இதில் **எல்லாரும்** என்ற வார்த்தையை எந்த தயக்கமும் இல்லாமல் உபயோகிக்கிறேன்.) அன்னிய பாஷை விஷயத்தில் அவர்கள் மிகவும் தவறாக உபதேசிக்கிறார்கள்.

மேலும் அன்னிய பாஷை பேசாத நபர்களை அவர்களுடைய மதுரை AGO வேதாகம கல்லூரியில் சேர்ப்பதில்லை. அன்னிய பாஷை அடையாளத்தை மையமாக வைத்து இவர்கள் பாஸ்டர்மார்களை உருவாக்குகிறார்கள் என்றால் அந்த பாஸ்டர்களின் ஆவிக்குரிய தரம் எப்படிப்பட்டது என்பது நன்றாக விளங்குகிறது. IPC. TPM சபைகளிலும் பாஸ்டர்மார்களை உருவாக்குவது **அன்னிய பாஷை** அடையாளத்தை வைத்துதான். உருவாக்குகிறார்கள். அதனால்தான் போலியாக அன்னிய பாஷை பேசும் பாஸ்டர்கள் உருவாகுகிறார்கள்.

**பெந்தேகோஸ்தே சபை** மக்கள் ஆராதிக்கும் சபையில் பேசப்படும் **அன்னிய பாஷையை** உற்று கவனியுங்கள். நீங்களும் அவர்களோடு சேர்ந்து உளராமல் உங்களை ஜாக்கிறதையாக பாரத்துக்கொளளுங்கள்.

**கேள்வி :** அன்னிய பாஷை **இன்றைய சபைக்கு கொடுக்கப்படவில்லை** என்கிறீர்கள். அதே சமயம் **அன்னிய பாஷை இப்போதும் உண்டு** என்றும் எழுதியிருக்கீறீர்கள். இது முன்னுக்கு பின் முரனாக தோன்றவில்லையா? இதில் நாங்கள் எதை நம்புவது ?

பதில் : **இரண்டையும் நம்ப வேண்டாம்.** இது முரன்பாடு அல்ல. இன்றைய சபைக்கு **அன்னிய பாஷை கொடுக்கப்படவில்லை** என்பதும் உண்மை . அது சரியானதுதான். அதே சமயம் இப்போதும் **அன்னிய பாஷை** வரமாக **தனி நபரின் வழியாக** செயல்படுகிறது எனபதும் உண்மையாகும்.

இயேசு கிறிஷ்துவின் சீஷர்களில் ஒருவன் **தோமா** அவரைத்தான் இயேசு கிறிஸ்து இந்தியாவுக்கு அனுப்ப திட்டமிட்டிருந்தார். அதன்படியே **தோமா** கப்பல் ஏறி இந்தியாவில் **கேரள** மாநிலத்தில் உள்ள **கிறங்கனூர்** என்ற இடத்தில் இறங்கினார். அவரை யாரும் அந்த ஊரில்வீட்டில் சேர்த்துக்கொள்ளவில்லை. காரணம், ஒன்று அவருக்கு பாஷை தெரியாது. அடுத்தது அவர் வேற்று நாட்டுக்காரர். ஆகவே யாரும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த ஊரில் ஒரு **இந்துகோவில்** இருந்தது. அதன் நடுவில் **ஒரு குளம்.** அந்த குளத்தின்மேல் பகுதியில் **கல்தரையில்** படுத்து உறங்கினார்.

மறுநாள் அதிகாலை அந்த ஊர் **நம்பூதிரிகள்** (பிராமனர்கள்) **சூரிய நமஸ்காரம்** செய்ய வந்தார்கள். வந்தவர்கள் குளத்தில் இடுப்பளவு தண்ணீரில் இறங்கி சூரியன் தென்பட்டபோது சுலோகங்கள், மந்திரங்கள் ஓதி - **தண்ணீரை** கைகளில் அள்ளி **சூரியனுக்கு நேராக** வீசி தொழுதார்கள். குளத்தின் படிகட்டில் அமர்ந்து அவர்கள் செய்கையை பார்த்து வேதனைப்பட்டார். **அழிந்துபோகும்** (சூரியனை) **சிருஷ்டியை** நோக்கி இவர்கள் ஜெபம் செய்கிறார்களே - இதை **சிருஷ்டித்தவரை** இவர்கள் அறியாமல் இருக்கிறார்களே என்று மன வேதனையடைந்து. கர்த்தரிடம் ஜெபிக்க துடங்கினார். கர்த்தாவே **அண்டசராசரங்களையும்** உண்டாக்கிவரே இந்த மக்களுக்காகவும் நீர் சிலுவையில் அறையப்பட்டிரே. இவர்களுக்கு **சிருஷ்டிகரான** உம்மைப்பற்றி அறிவிக்க எனக்கு உதவும் என்று ஜெபிக்க **பரிசுத்தாவியானவர்** தோமாவிற்குள் கிரியை செய்ய ஆரம்பித்தார். உடனே **பாஷை வரத்தை** தோமாவுக்கு அந்த நிமிடமே கர்த்தர் அருளினார்.

உடனே தோமா சத்தமாக **மலையாள பாஷையில்** அவர்களை அழைத்து இதே **சூரியன்** அழிந்துபோகும். **சூரிய நமஸ்காரம்** செய்து பிரயோஜனமில்லை. இதே **சூரியனையும்** சந்திரனையும் **நட்சத்திங்களையும் உண்டாக்கிய** தெய்வம் ஒருவர் உண்டு. அவரைப்பற்றி அறிவிக்கவே அவரால் அனுப்பட்டு இங்கு வந்திருக்கிறேன். அவர் பெயர் **இயேசு கிறிஸ்து** என்று கூறினார். அங்கு ஒரு பெரிய அற்புதம் நடந்தது. இப்போது அதை விளக்க நேரம் இல்லை. அந்த அற்புதத்தை கண்ட அந்த **நம்பூதிரிகள்** (பிரமனர்கள்) குடும்பமாக இயேசு கிறிஸ்துவை **குல தெய்வமாக** ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள்தான் **ஆர்த்டாக்ஸ் கிறிஸ்தவர்கள்** என்று கேரளத்தில் அழைக்கப்படுகிறார்கள். இப்படித்தான் **முதல் கிறிஸ்தவம்** இந்தியாவில் கேரளத்தில் தோன்றியது.

இப்போது கேள்வி என்ன ? **தோமா** கப்பலிருந்து இந்தியாவில் உள்ள **கேரளத்தில்** இறங்கிய உடன் **சுவிசேஷம்** எப்படி அறிவித்தார் ? **மலையாள பாஷை** கற்றுக்கொள்ள அவருக்கு நேரம் இல்லை. வந்து இறங்கிய அந்த சூழ்நிலையில் உடனே அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவேண்டிய அவசர நிலை உருவானது. அந்த சந்தர்ப்பத்தை உடனே தாமதமில்லாமல் பயன்படுத்த விரும்பினார். ஜெபித்தார் ஆவியானவர் உதவினார் **சரளமாக மலையாளத்தில்** முழு சுவிசேஷத்தையும் ஒரு பெரும் **அற்புதத்தோடு** அவர்களுக்கு அறிவித்து முடித்துவிட்டார். இது எப்படி சாத்தியமாயிற்று. இதுதான் பரிசுத்தாவியானவர் அருளிய **பாஷை வரம்** இங்கு அவர் மூலமாக செயல்பட அந்த கிராமமே இயேசுவை சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்டது. தோமாவுக்கு **மலையாள பாஷை** கற்றுக்கொள்ள நேரமில்லை. ஆகவே ஆவியானவர் **பாஷை வரம் தந்து** உதவினார். அதனால்தான் கூறுகிறேன். இப்போதும் **பாஷை வரம்** பல்வேறு நாடுகளிலும், இந்தியாவிலும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது உண்மை.

## நான் நேரில் கண்ட பாஷை வர சம்பவம்

சுமார் 35 வருடங்களுக்கு முன் இந்தியாவில் **ஆந்திர மாநிலத்தில்** ஊழியத்துக்காக சென்றிருந்தேன். அப்போது பகல் கூட்டத்தில் என்னிடம் ஜெபிக்க வந்த கூட்டத்தில் இந்திய **ராணுவ உயர் அதிகாரியும் அவர் மனைவியும்** வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் மேடை ஏறி சாட்சி கூறினார்கள் ஒரு சகோதரி அதை தெலுங்கு பாஷையில் மொழி பெயர்த்தார்.

## அவர்கள்தங்கள் சாட்சியில் கூறியதாவது.

ராணுவ அதிகாரிபெரும்குடிகாரர். குடித்துவிட்டு தன் மனைவியை மிகவும் சித்திரவதை படுத்துவார். தினசரி இராத்திரி குடித்துவிட்டு புட்ஸ்காலால் எட்டி உதைப்பார். ஒரு முறை வயிற்றில் உதைத்ததால் **கர்ப்பம் கலைந்தது.** இதற்குமேல் தன்னால் தாங்கமுடியாது என்று அவர் மனைவி ஒருநாள் **ஜலந்தரில்** உள்ள தன் தாய் வீட்டுக்கு சென்றுவிட்டாள்.

அங்கு தாய் வீட்டிலும் போராட்டம். இவளுக்கு கீழே 4 தங்கைகள் உண்டு. உன்னை திருமணம் செய்து வைத்ததால் நாங்கள் பெரும் கடனாளி ஆகிப்போனோம். மீதி நான்கு பெண்களுக்கு எப்படி திருமண ஏற்பாடு செய்து அனுப்புவேன் என்று கலங்கி இருக்கும்போது நீயும் இப்போது வாழா வெட்டியாக வந்து நிற்கிறாயே தயவு செய்து உன் கணவனிடம் போய் சேர். நீ இங்கிருந்தால் மற்ற பெண் பிள்ளைகள் கல்யாணம நடக்காது என்று கூறி அடுத்த ரயிலில் அந்த மூத்த மகளை (ராணுவ அதிகாரியின் மனைவியை) திரும்பி அனுப்பிவிட்டார்கள்.

வேறு வழியின்றி அவள் கணவன் வீட்டுக்கு வந்தாள் இப்போது அவள் கணவர் முன்பைவிட மிகவும் கொடுமைபடுத்த தொடங்கிவிட்டார். உடலெல்லாம் காயம். தாய் வீட்டிலிருந்து திரும்பிய அன்று கணவன் அவளை அடித்ததால் 7 தையல் போட்டு பெரும் காயத்துடன் படுத்தபடுக்கையானாள்.

ஒரு நாள் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். கணவன் வீட்டில் அடி தாங்க முடியவில்லை. தாய்வீட்டிலும் ஆதரவு தரவில்லை. இனி வாழ்வதைவிட சாவதுமேல் என்று தீர்மாணித்து ராணுவ காலனியிலிருந்து சற்று தூரத்தில் உள்ள கடையில் **எலி விஷம் மருந்து** வாங்கி தற்கொலை செய்யும் எண்ணத்தில் மருந்தை வாங்கிக்கொண்டு வீடுதிரும்பினாள். வீடு திரும்பும் வழியில்

வரிசையாக அமைந்திருந்த வீடுகள் நிறைந்த வீதி வழியாக நடந்து வந்துகொண்டிருந்தாள். அப்போது மாலை சுமார் 7 மணியிருக்கும் ஒரு வீட்டை தாண்டி சென்று கொண்டிருந்தபோது அந்த வீட்டிலிருந்து யாரோ தன் பெயரை சொல்லி அழைக்கும் சப்தம் கேட்டது. சற்று தயற்கி நின்றாள்.

அப்போது மறுபடியும் தன் பெயரை அழைத்ததோடல்லாமல் தன் தாய் மொழியான **ஒரியா** மொழியில் **மகளே நான் உன்னை** நேசிக்கிறேன். **சீக்கிரமே** உன் பிரச்சனைகள் ஒரு முடிவுக்கு வரும். உன் **கணவரை நான் மாற்றுவேன் நீ சாகக்கூடாது** என்ற சப்தம் கேட்டது. அந்த சப்தம் இரண்டு நிமிடம்தான் கேட்டது, உடனே அவள் தன் வீட்டுக்கு சென்றுவிட்டாள் **அன்று தற்கொலை** செய்யும் திட்டத்தை கைவிட்டாள். மறுநாள் கணவர் வேலைக்கு சென்றதும், அவள் உடனே அவள் தான் மருந்து வாங்க சென்ற அந்த வீதி வழியே சென்று நேற்று இரவு எந்த வீட்டிலிருந்து தன் பெயரை அழைக்கும் சப்தம் கேட்டதோ அந்த வீட்டை கண்டு பிடித்து வெளியில் நின்றவாரே அந்த வீட்டாரை அழைத்தாள். ஒரு சகோதரி வெளியே வந்து என்ன வேண்டும் ? என்று கேட்டாள். உங்கள் வீட்டில் யாருக்கு **ஒரியா** மொழி தெரியும்? நேற்று மாலை உங்கள் வீட்டிலிருந்து என் பெயரை குறிப்பிட்டு ஒரியா மொழியில் என்னிடம் பேசிய சப்தம் கேட்டேன் என்றாள்.

அந்த சகோதரி எங்கள் யாருக்கும் **ஒரியா மொழி** தெரியாது நாங்கள் **தெலுங்கு** பாஷை மட்டுமே பேசுவோம். உங்களுக்கு **ஹிந்தி** தெரியுமானால் பேசுங்கள். என் மருமகளுக்கு கொஞ்ஜம் ஹிந்தி தெரியும். எனக்கும் கொஞ்ஜம் இந்தி தெரியும் என்றார்கள். மாலை நடந்த விஷயத்தை அப்படியே அவள் கூறி என் **ஒரியா** பாஷையில் பேசியது ஒருவேளை வேறு வீட்டிலிருந்தாயிருக்குமோ? நீங்கள் வீடு மாறி வந்துவிட்டீர்களோ என்றார். ஆனால் அவளோ இந்த வீடுதான் நேற்று மாலை சுமார் 7-00 மணிக்கு நான் வீட்டை கடக்கும்போதுதான் அந்த சப்தம் கேட்டது என்றாள்.

உடனே அவ்வீட்டார் 7-00 மணிக்கு நாங்கள் யாவரும் **குடும்ப ஜெபத்தில்** இருந்தோம். ஆகவே உங்கள் பெயரை எங்கள் வீட்டிலிருந்து யாரும் அழைத்திருக்க நியாயமில்லை. ஆனால் உங்கள் கதையை கேட்கும்போது எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. நிச்சயம் இது **எங்கள் கடவுளின் செயலாக இருக்கும்.** ஆகவே பக்கத்தில் **எங்கள் சபை பாஸ்டர்** வீடு இருக்கிறது உங்களை அழைத்து போகிறேன், அவருக்கு **ஒரியா** மொழி கொஞ்ஜம் தெரியும். மேலும் உங்களை அழைத்த குரலின் இரகசியம் குறித்து எனக்கு சொல்ல தெரியவில்லை. எங்கள் பாஸ்டர் அதை விளக்குவார் என்று கூறி பாஸ்டரிடம் அழைத்துபோனர். பாஸ்டர் அந்த பெண்ணின் **தற்கொலை கதையை** கேட்டபின் **இயேசு தெய்வம்** உங்களை நேசிக்கிறார். உங்களை தற்கொலையிலிருந்து காப்பாற்றவே அவர் உங்களை தடுக்க உங்கள் **பெயரை** அழைத்து பேசியிருக்கிறார். அப்படியானால் **ஒரியா பாஷை** அறியாத அந்த குடும்பத்தினரின் குடும்ப பிரார்த்தனையில் அவர்களுக்கு சம்பந்தமே இல்லாத **என் பெயர்** இவர்கள் வாய் வழியாக எப்படி வந்தது என்று கேட்டாள்.

அதுதான் அம்மா **பரிசுத்த ஆவியானவரின் பாஷை வரம்** என்பது. அந்த **பாஷை வரத்தை** இந்த வீட்டார் வாயில் கொடுத்து பேசியிருக்கிறார். ஆவியானவர் ஒருவரோடு பேச யாரை வேண்டுமானாலும் உபயோகிப்பார். அந்த குடும்பத்தினரே அறியாமல் அவர்கள் ஜெயம்

செய்யும்போது அவர்களில் யாருடைய **வாயையோ** ஆவியானவர் உபயோகித்து உங்களை **தற்கொலையிலிருந்து** தடுத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். தைரியமாக போ! இயேசு பரமேஷ்வரிடம் நீயும் பேசு, நிச்சயம் உன் வீட்டில் **அற்புதம் நடக்கும்** என்று கூறி ஜெபித்து அந்த பெண்ணை அனுப்பி வைத்தார்.

வீட்டிற்கு வந்ததும் அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. வீட்டுக்குமுன் ராணுவ ஆம்புலன்ஸ வாகனம் நிற்பதை கண்டு அதிர்ந்துபோனாள். கணவர் இரத்த வாந்தி எடுத்திருந்தார். ஆகவே அவரை ஆஸ்பத்திரி கொண்டு போகிறோம் என்று மற்ற அதிகாரிகள் கூறி மனைவியாகிய அவளையும் ஆமபுலன்ஸில் ஏற்றி கூட்டிசென்றார்கள்.

அவள் கணவருக்கு **ஈரல் வீங்கி** இரத்த கசிவு ஏற்பட்டுள்ளது என்ற விவரம் அவளிடம் அறிவித்தார்கள். இரண்டாம் நாள் இரவு அவள் கணவர் அவளிடம் பேசினார். உன்னை என் குடியினால் மிகவும் கொடுமைபடுத்திவிட்டேன். என்குடி என்னை மரணபடுக்கையில் ஆக்கிவிட்டது. நான் பிழைப்பது கடினம் என்று டாக்டர்கள் பேசிக்கொள்வதை நான் கேட்டேன். என்னை நீ மன்னித்துவிடு என்றார். என்ன ஆச்சரியம் ! பாஸ்டரிடம் ஆலோசனை பெற்று ஜெபித்து சில மணி நேரத்தில் **முரட்டு குடிகார கணவர்** என்னிடம் **மன்னிப்பு** கேட்கும் அதிசயம் எப்படி நடந்தது ? இயேசுவுக்கு நன்றி கூறினாள். ½

அன்று இரவு இயேசுவிடம் அவள் ஜெபித்தாள். இயேசுவே நீர் என்னை தற்கொலையிலிருந்து தடுக்க அந்த தெலுங்கு பேசும் குடும்பத்தினரின் வாய் வழியாக என்பெயரை அழைத்து என் பிரச்சனை தீரும என்ற உன் வீட்டில் **ஒரு மாற்றம் உண்டாக்குவேன். நீ தற்கொலை செய்யாதே** நான் உன்னை நேசிக்கிறேன் என்றும் கூறின தெய்வமே! இப்போது என் கணவர் பிழைக்கமாட்டார் என்று எல்லாரும் கூறுகிறார்கள் **என் கணவர் மரித்த பின் எனக்கு ஏது வாழ்க்கை** ? என்பெற்றோரிடமும் நான் போகமுடியாது! ஏறக்குறைய நான் ஆனாதை ஆகிவிட்டேன். என்னைக்குறித்து உமது திட்டம் என்ன? என்று ஜெபித்தாள்.

அன்று இரவு கணவர் வலியினால் துடித்தார். இதுதான் தக்க சமயம் என்று அவள் தீர்மானித்து தன் கணவனிடம் **தான் தற்கொலை செய்ய முயற்சித்த விஷயத்தையும், எலி விஷம்** வாங்கியது முதல் **தெலுங்கு** குடும்பத்தாரின் குடும்ப ஜெபத்தில் **ஒரியா மொழியில்** இயேசு தன்னோடு பேசியதையும், அந்த பாஸ்டர் கூறிய **விளக்கத்தையும்** ஒன்றுவிடாமல் தன் கணவரிடம் பயந்தவாரே கூறினாள். இயேசு தெய்வத்தை பற்றி கூறும்போது நான் மதம் மாறிவிட்டேன் என்று தன் கணவருக்கு கோபம் வருமோ என்று பயந்திருந்தாள். அப்போது அவர் சொன்னார் அந்த இயேசு பேசியது உண்மையானால் நான் மரிப்பதில்லை. என்றார். ஆனால் இன்று இராத்திரி நான் **வலியில்லாமல் துாங்கி** மறுநாள் டாக்டர்கள் நல்ல செய்தி கூறுவார்களேயானால் நான் சுகம் பெற்ற உடன் உன்னோடு அந்த பாஸ்டரை சந்திக்க வருவேன் என்றார். அவளுக்கு சொல்லமுடியாத சந்தோஷம். அன்று இரவு அவள் கணவர் குழந்தையயைபோல் வலி ஏதும் இல்லாமல் தூங்கினார். ஆனால் அவளோ இரவு முழுவதும் ஜெபித்துக்கொண்டேயிருந்தாள். கர்த்தர் அவள் ஜெபத்தை கேட்டார்.

மறுநாள் டாக்டர்கள் மறுபடியும் ஸ்கேன் எடுத்து பார்த்து இரத்த கசிவு நின்றுவிட்டது. **மரண கட்டத்தை** உன் கணவர் தாண்டிவிட்டார். இனி மறுபடியும் குடிக்க தொடங்கினால் யாராலும் அவரை காப்பாற்ற முடியாது என்றனர். மேஜர் சுகம் பெற்றார். கணவனும் மனைவியுமாக

1½ மாதம் கழித்து அந்த **தெலுங்கு** குடும்பத்தையும், அந்த **பாஸ்டரையும்** சந்தித்து ஜெபித்து திரும்பினர். **அந்த பாஸ்டர் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர் அல்ல** என்பதை கவனிக்க வேண்டும்.

ஆந்திர மாநிலத்தில் நடந்த இந்த சம்பவத்தில் **மனம் திரும்பிய** மேஜரும் **ஒரியா பாஷைபேசும்** அந்த பெண்ணும் என் கூட்டத்தில் வந்து அந்த சாட்சியை கூறினார்கள். அநேகருக்கு அந்த சாட்சி பிரயோஜனமாக இருந்தது.

இந்த சம்பவத்தை 20 வருடங்களுக்கு முன் ஜாமக்காரனில் எழுதியிருக்கிறேன்.

இப்போதும் இந்த காலத்திலும் **அன்னிய பாஷை** உண்டு! ஆனால் **அது சபைக்கு கொடுக்கப்பட்டதல்ல.** ஆவியானவர் **தோமாவை** அன்னிய **பாஷை வரம்** மூலம் உபயோகித்ததுபோல **ஆந்திர** மாநிலத்தில் **தெலுங்கு பாஷை** மட்டுமே அறிந்த பெந்தோகோஸ்தே சபையை **சார்ந்திராத** ஒரு ஆவிக்குரிய தெலுங்கு பேசும் குடும்பத்தினர் மூலம் கர்த்தர் **அன்னிய பாஷை வரத்தை** உபயோகித்து அந்த **ராணுவ குடிகார அதிகாரியின்** மனைவியுடன் **ஒரியா** பாஷையில் பேசி அந்த முழு குடும்பத்தையும் தன் பிள்ளைகளாய் மாற்றிய **கிறிஸ்து இயேசுவின்** கிருபை எத்தனை பெரியது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

மேலே வாசித்த இரண்டு அனுபவங்கள் மட்டுமல்ல **அன்னிய பாஷை வரம்** இப்போதும் உண்டு நாம் வாழும் காலத்திலும் உண்டு என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு.

நான் மேலே குறிப்பிட்ட இரண்டு உதாரணங்களை கவனியுங்கள்

1) தோமா 2) ஒரியா பாஷை பேசும் பெண்.

இப்போது 1 கொரி 14:22 கவனியுங்கள்.
அன்னிய பாஷைகள் **விசுவாசிகளுக்கு அடையாளம் அல்ல.**
அன்னிய பாஷைகள் **அவிசுவாசிகளுக்கு** அடையாளம் ஆகும்.

1) **தோமா** - கேரள நம்பூதிரிகளின் மலையாள பாஷையில் கர்த்தர் கொடுத்த **அன்னிய பாஷை வரம்** மூலம் சுவிசேஷம் அறிவித்தார். **நம்பூதிரிகள் அவிசுவாசிகள்.** அவர்களின் மலையாள பாஷை அறியாத தோமா மலையாளத்தில் அவர்களோடு பேசியது **அவிசுவாசிகளாகிய** நம்பூதிரிகளுக்கு அது **அடையாளம்.**

2) **தெலுங்கு பாஷை** பேசும் குடும்பத்தினர் மூலம் **ஒரியா** என்ற அன்னிய பாஷையில் ஆவியானவர் பேசியது. **ஒரியா பாஷை** பேசும் **அவிசுவாசியான** அந்த பெண்ணுக்கு அடையாளம்.

- ☐ பரிசுத்த ஆவியானவரை டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் நம்பவில்லை. **வரங்களை** அவர் நம்பவில்லை. குறிப்பாக **அன்னிய பாஷை வரங்களே இல்லை** என்றும் அவர் மறுக்கிறார் என்றல்லாம் புரளியை கிளப்பினவர்கள் **அன்னிய பாஷை வரம்** இப்போதும் உண்டு என்று

நிரூபிக்க நான் எழுதிய இந்த **இரண்டு உதாரணங்களை** வாசித்தால் அவர்கள் வாய் அடைந்து போகும்.

**கேள்வி :-** ஒரு பாஸ்டர் என்னை பார்த்து **இரட்சிக்கப்பட்டீர்களா** என்றார். ஆம் நான் இரட்சிக்கபட்டிருக்கிறேன் என்றேன். **உடனே அபிஷேகம் பெற்றுக்கொண்டீர்களா**? என்று கேட்டார். அதற்கு நான் **அபிஷேகம்** என்று நீங்கள் எதைக்குறிப்பிடுகிறீர்கள? என்றேன். அதற்கு அவர் **பரிசுத்த ஆவியானவரின்** நிறைவும் - **அன்னிய பாஷை அடையாளமும்** என்றார். அந்த அனுபவம் எனக்கு விளங்கவில்லை என்றேன். எங்கள் சபைக்கு வாருங்கள் நான் அவைகளைப்பற்றி சொல்லிக்கொடுக்கிறேன் என்றார். ஆனால் நான் அவர் சபைக்கு போகவில்லை

**பதில்:-** நல்ல வேளை நீங்கள் அங்கு போகாதது நல்லது. **அபிஷேகம்** என்பதற்கு பரிசுத்தாவியானவரை குறிக்கும் இரண்டு இடங்கள் புதிய ஏற்பாட்டில் உண்டு. மற்றபடி **அபிஷேகம்** என்பது **நியமிக்கப்படுதல்** என்று அர்த்தமாகும். **சவுலை** இஸ்ரவேலருக்கு ராஜாவாக **அபிஷேகம்** பண்ணு என்று கர்த்தர் சாமுவேலுக்கு கட்டளை கொடுத்தார். அதன் அர்த்தம் இனி அவன் இஸ்ரவேலர்களை ஆளும் வேலையை மட்டும் செய்யவேண்டும். இந்த இடத்தில் **அபிஷேகம்** என்றால் ஒரு முக்கிய வேலைக்கு **நியமிக்கப்படுதல்** என்று அர்த்தம் ஆகும்.

தேவாலய பணிமுட்டுகளை, பாத்திரங்களை சாமான்களை கூட **அபிஷேகிக்க** வேண்டும். என்று கர்த்தர் கூறினார். அந்த ஆலய பொருட்கள், பாத்திரங்கள், மேசை, நாற்காலி இவை யாவும் **ஆலய உபயோகத்துக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.** அந்த பொருட்கள் வேறு எந்த காரியத்துக்கும் உபயோகப்படத்தக்கூடாது என்பதுதான் அதன் அர்த்தம்.

☐ இயேசு கிறிஸ்துவும் கூறினார். தரித்திரருக்கு **சுவிசேஷத்தை** பிரசங்கிக்கவும் **இருதயம் நருங்குண்டவர்களைக்** குணமாக்கவும், **சிறைப்பட்டவர்களுக்கு** விடுதலையளிக்க, **குருடருக்கு** பார்வையளிக்க, **நொருங்குண்டவர்களை** விடுதலையாக்க கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை **பிரசித்தப்படுத்த** கர்த்தர் **என்னை அபிஷேகம் பண்ணினார்.** லூ. 4:18. ஏசா : 61:1-3

அதாவது இப்படிப்பட்ட அற்புதங்களை மனிதர்களுக்கு செய்ய பிதா என்னை **(நியமித்தார்) அபிஷேகம்** பண்ணினார் என்று இதற்கு அர்த்தமாகும்.

ஒருவேளை அந்த பாஸ்டர் **பரிசுத்த ஆவியை மனதில் நினைத்து** அபிஷேகம் பெற்று கொண்டீர்களா என்று கேட்டிருந்தாலும், நீங்கள் மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டிருப்பதினால் தைரியமாக இப்படி அவரிடம் சொல்லாம். ஆம் பாஸ்டர் நான் **இரட்சிக்கப்பட்டபோதே** எபே. 1:13. யோ 14:23,24,25ன் படி **ஆவியானவர் எனக்குள் வந்துவிட்டார்** என்று நீங்கள் பாஸ்டரிடம் கூறலாம்.

**கேள்வி :** நீங்கள் எல்லாரும் அன்னிய பாஷைகளைப் பேச வேண்டும் என்று விரும்புகிறேன் என்று பவுல் குறிப்பிடுகிறாரே ?

பதில் : ஆம் கொரிந்து சபையில் புற ஜாதியாரிலிருந்து விசவாசிகளாக மாறியவர்கள் உண்டு அவர்கள் பாஷைகளை கற்று அவர்களோடு பேசி பழகினால் ஆவிக்குரிய ஐக்கியம் வைக்கலாமே. இல்லையென்றால் சபையில் அவர்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் தனித்து இருப்பார்களே. அப். 2:42ல் கூறியபடி சபை உபதேசத்தில் நான்கு முக்கிய விஷயங்களில ஒன்று **அன்யோன்யம்** (Fellowship) என்ற உபதேசம் முக்கியமாகும். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் ஒருதாய்வயிற்று பிள்ளைகளைப்போல வாழவேண்டுமே! அதற்கு மற்ற பாஷை பேசும் விசுவாசிகளின் பாஷையை கற்றிருத்தல் மிக முக்கியம். ஆகவேதான் கொரிந்து சபையினரை பார்த்து நீங்களும் அன்னிய பாஷைகளை பேச வேண்டுமென்று விரும்புகிறேன் என்று பவுல் கூறுகிறார்.

மற்றவர்களின் மொழியை கற்று அதன் அர்த்தத்தையும் விளங்கிகொண்டால் வசனங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு சபையில் பக்தி விருத்தி உண்டாக வழி உண்டாகும் என்கிறார். !

**கேள்வி :** சபையாரெல்லாரும் ஆராதிக்க கூடிவரும்போது **அன்னிய பாஷையில் பேச வேண்டாம்** என்பது போல 1 கொ. 14:6-22ல் பவுல் கூறுகிறாரே.. அதன் விளக்கமென்ன ?

**பதில் : -** ஆமாம் ஏராளமான பாஷை பேசுகிறவர்கள் கூடுகின்ற கொரிந்து சபையிலேயே ஆராதனை வேளையில் எல்லாரும் அவரவர்களின் பாஷைகளில் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தால் எப்படியிருக்கும், கற்பனை செய்து பாருங்கள். **சந்தை கூடுகின்ற** இடத்தில் கேட்கிற கூச்சல் சத்தம் மாதிரி இருக்கும். இந்த சமயத்தில் ஒரு **அவிசுவாசி** அதாவது இயேசுவை அறியாத நபர் சபை ஆராதனைக்கு வந்தால் அங்கு விதவிதமான பாஷைகள் பேசும் சபை மக்களின் கூச்சலை கேட்டால் "உங்களை **பைத்தியம் பிடித்தவர்களளென்பார்களல்லவா**? 1 கொரி .14:23. அதனால்தான் சபை ஆராதனையில் அன்னிய பாஷையில் பேசவேண்டாம் என்று பவல் கூறினார்.

☐ இதேபோல சில சபைகளில் சபை மக்கள் **அன்னிய பாஷை** என்ற பெயரில் **கத்தும் சப்தத்தை** ஸ்பீக்கரில் பொதுமக்கள் கேட்டும்படி செய்கிறார்கள். இது எவ்வளவு முட்டாள்தனம். மற்ற மதத்தினர் இப்படிப்பட்ட **பெந்தேகோஸ்தே** சபையினரைப்பற்றி என்ன நினைப்பார்கள்? **இது முற்றிய பைத்தியங்கள் நிறைந்த பைத்தியக்கார ஆஸ்பத்திரியாக இருக்குமோ?** என்றல்லவா நினைப்பார்கள்.. ஆராதனை நடத்துகிற பாஸ்டர்களுக்காவது இதைக்குறித்து ஞானம் இல்லாமல் போனதே.. இப்படிப்பட்ட சப்தத்தால் தானே சபையின் அருகேயுள்ள வீட்டினர், கடைக்காரர்கள் **காவல் துறைக்கு** புகார் அளித்து எத்தனையோ சபைகளை மூடி சீல் வைத்ததுள்ளனர்.

சென்னையில் உள்ள AOG சபையில் இப்படிப்பட்ட கூச்சல் அதிகமானதால் **காவல் துறையும்** நீதிமன்றமும் அந்த பாஸ்டரை எச்சரித்ததால் அந்த சபை இப்போது முழுவதும் A/c குளிர் சாதனகருவி பொருத்தப்பட்டு கதவுகள், ஜன்னல்கள் அடைக்கப்பட்டு அதே கட்டிடத்தில் ஆராதிக்கிறார்கள். அதற்கு பல கோடி ரூபாய் செலவு செய்து அந்த ஏற்பாட்டை செய்துவிட்டனர். இப்படி சில பாஸ்டருக்கு சபை ஜனங்களை **கூச்சலிடவைத்து, கூக்குரலிடவைக்க வேண்டும்.** அல்லது அழ வைக்கவேண்டும். அதுதான் **பரிசுத்த ஆவியின் அபிஷேகம்** என்று பாவம் அந்த சபை மக்கள் ஏமாந்து **பைத்தியக்காரனார்கள்.** ஆராதனை முடித்து சபை மக்கள் வெளியே வருமபோது பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நோயாளிக்கு **மின்சார சிகிச்சை** (ஷாக் டிரீட்மெண்ட்) செய்து அனுப்பப்பட்டவர்களைப்போல காணப்படுவார்கள். மிகவும் பரிதாபம்!. சில சபைகளில் அல்லது சில பெந்தேகோஸ்தே கூட்டங்களில் **மைக்** வழியாக அக்கினி! அக்கினி! FIRE ! FIRE ! பயர்! பயர்! ஊற்றும் ஊற்றும் நிறையும்! நிறையும்! என்று **பாஸ்டரும்** பாடகர் குழுவினரும் **கூச்சலிடும்** சப்தத்தை கேட்பவர்கள் ஆராதனை கட்டிடத்தில் தீபிடித்து விட்டதோ, அதனால்தான் **அக்கினி** என்கிறார்கள் **ஊற்றும்** என்கிறார்கள் ஒரு வேளை **தீயணைக்கும் வண்டி** வந்துவிட்டதோ! என்றெல்லாம் பொது மக்களுக்கு நினைக்கத்தோன்றுமே. ஒரு ஒழுங்கு இல்லாத மோசமான ஆராதனை என்று தானே கூறுவார்கள்.

☐ ஏஞ்ஜல் TVயில் ஒவ்வொரு நாள் மதியானம் என்று நினைக்கிறேன். 5 பேர் சேர்ந்து பொது ஜெபம் நடத்துவார்கள் பாருங்கள். அந்த ஜெபத்தில் அவர்கள் இடையிடையே **பாஷை** என்ற பெயரில் **உளருவார்கள்** பாருங்கள். **கேட்க சகிக்காது.** ஆயிரக்கணக்கான **பொதுமக்கள்** பார்க்கும் TV நிகழச்சியாயிற்றே பொதுமக்கள் இவர்கள் இப்படி உளருவதை பார்த்து என்ன நினைப்பார்கள் என்ற **கூச்சம்கூட** இல்லாது, **வயிற்று வலியினால்** துடிப்பவர்கள் **முகம் சுளிப்பார்களே** அப்படி முகத்தை வைத்துக்கொண்டு கண்டபடி உளருகிறார்கள் கிறிஸ்தவர்களுக்கு இந்த காட்சிகள் மற்றவர்களுக்குமுன் பெருத்த அவமானத்தை அளிக்கும்.

இப்படி **உளருவதை** இப்போது சிறு பிள்ளைகளுக்கும் இவர்கள் சொல்லிக்கொடுத்து தங்கள் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் சிறு பிள்ளைகளை **கெடுப்பது** மாத்திரமல்ல அந்த நிகழ்ச்சியை காணும் இந்திய-வெளிநாட்டு **சிறு பிள்ளைகளையும்** இவர்கள் கெடுத்து குட்டிச்சுவராக்குகிறார்களே! மிகவும் **கடினவார்த்தைகளை** நான் உபயோகிக்க வேண்டியுள்ளது. இதே அவல நிலைதான் இன்றைய **பல பெந்தேகோஸ்தே** சபைகளில் காணப்படுகிறது. ஆராதனை நடத்துகிற **பாஸ்டராவது** சத்தத்தை கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் அவர்களோ அதை **ரசிக்கிறார்கள்.** சபை முழுவதும் அக்கினி இறங்கிவிட்டதாக நினைக்கிறார்கள். அந்த குறிப்பிட்ட **சபை மக்கள்** பரிதாபத்துகுறியவர்கள். !

கேள்வி : புதிய ஏற்பாட்டில் மற்ற எல்லா சபைகளை காட்டிலும் பவுல் அப்போஸ்தலன் **கொரிந்து சபைக்கு** மட்டும் அதிக **முக்கியத்துவம்** கொடுக்க காரணம் என்ன ?

பதில் : பவுல் யூதர்களைவிட **புற ஜாதிகளைக்குறித்து** அதிக பாரம் கொண்டவர். அதனால்தான் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்ட யூதர் அல்லாத மற்ற **புற ஜாதிகளும்,**

விதவிதமான **பாஷைகள் பேசுபவர்களும்** நிறைந்த **கொரிந்து** சபையைக்குறித்து மிக அக்கரை கொண்டவராக இருந்தார். கொரிந்து பட்டணத்துக்கு முதன்முதல் ஊழியத்துக்கு வந்தபோது அவர் மிகவும் நடுக்கத்தோடு காணப்பட்டார் என்று வாசிக்கிறோம். காரணம் கொரிந்து பட்டிணம் அநேக **விக்கிரக வணக்காரர்கள்** நிறைந்த இடம். மேலும் எங்கு பார்த்தாலும் **விபச்சார பாவத்துக்கு** அடிமையான மக்கள் நிறைந்திருந்தார்கள். இப்படிப்பட்ட விக்கிரக வணக்ககாரருக்கு **வேசிதனத்துக்கு** அடிமைப்பட்டவர்களுக்கு எப்படி **சுவிசேஷம் அறிவிப்பது?** என்று திகைத்தார்.

**விபச்சாரத்தில்** ஊறி அடிமைப்பட்ட இந்த மக்களுக்கு **பிரிசுத்த** தெய்வதத்தைப்பற்றியும் **விபச்சாரத்தை** நிறுத்தி **பரிசுத்தமாய் வாழ்வதைப்பற்றியும்** எப்படி சொல்வது? என்ற பயத்தினால் அந்த நடுக்கம் வந்திருக்குமோ என்று சில வேத ஆராய்சியாளர்கள் யூகிக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து அந்த மக்களுக்காகவும் இரத்தம் சிந்தியபடியாலும் அந்தமக்களையும் இயேசு நேசித்தபடியால் பவுலின் பிரசங்கம் மூலம் ஏராளமானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். ஆவியானவரின் கிருபையினால் கொரிந்து பட்டிணத்திலே பெரிய அசைவு உண்டாகி ஏராளமாணவர்கள் இயேசுவுக்கு தங்களை ஒப்புக்கொடுத்து கிறிஸ்தவ சபையிலே சேர்க்கப்பட்டார்கள். அங்கு சபை உருவானது. இப்படி கிறிஸ்தவ சபை உருவான பிறகும் இரட்சிக்கபட்டவர்களாக சபை அங்கத்தினர்களாகியும் பவல் மற்ற நாடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க சென்ற பிறகு **கொரிந்து சபையைப்பற்றி** விசாரித்து அறியும்போது அதிர்ச்சி தரும்த தகவல் கிடக்கிறது

பவுல் தான் கிறிஸ்துவை குறித்து அறிவித்த அதே கொரிந்து சபையில் மறுபடியும் **பழைய பாவங்கள்** சபை விசுவாசிகளுக்குள் வந்துவிட்டது என்று அறிந்து மிகவும் வேதனையோடு கொரிந்து சபைக்கு (நிருபம்) கடிதம் எழுதுகிறார். கொரிந்து சபை விசுவாசிகளுக்குள் மறுபடியும் **விபச்சார** பாவம் **விக்கிரக** ஆராதனையும் சபையில் பிரிவினையும் வேசித்தனமும் காணப்பட்டது. கர்த்தருடைய பரிசுத்த மேசையில் (பந்தியில்) துணிகரமானது தகுதியிழந்த நிலையில் பங்கு பெற்றார்கள். தெய்வ பயமற்ற, **பல பாவ பட்டியலை** அந்த நிரூபத்தை வாசிக்கும்போது நாம் அறியலாம்.

**கொரிந்து** என்றால் **விபச்சாரம்** என்று அர்த்தம். அதனால் **கொரிந்து** சபைக்கு எழுதும் கடிதம் என்றால் **விபச்சாரர்களுக்கு** எழுதும் கடிதம் என்றும் அர்த்தம் கொள்ளலாம் என்று ஒருவர் எழுதுகிறார்.

அதே சமயம் **நல்ல ஆழமான விசுவாசிகளும்** அதே சபையில் இருந்தார்கள் **கொரிந்து** சபையில் நல்ல **வரங்களை பெற்றவர்களும்** காணப்பட்டார்கள். அதனால் மற்ற சபைக்கு எழுதிய நிரூபங்களைவிட கொரிந்து சபைக்கு விசேஷ விதத்தில் **நிறைய ஆலோசனைகளை** கூறி கடிதம் எழுதுகிறார். **பரிசுத்த ஆவியின்** நிறைவை பெற்றவர்களும் **பழைய பாவத்தில்** வீழ்ந்து போனதை **தன் கடிதத்தில்** சுட்டிக்காட்டுகிறார். பவுல் அந்த சபை மக்களை மிகவும் நேசித்தப்படியால்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து பல விஷயங்களை குறித்தும் பரிசுத்த ஆவியானவரின் ஆவிக்குறிய ஆலோசனைகளையும் மிக அதிகமாக எழுதியுள்ளார்.

**கேள்வி :** 1 கொரி 14:2 "**அன்னிய பாஷையில்** பேசுகிறவன் ஆவியினால் இரகசியங்களை பேசினாலும் அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினால் அவன் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான்."

**பதில்:-** இப்போது சரித்திர பிண்னணியை கவணியுங்கள். அன்றைய கொரிந்து சபையில் 16 பாஷைகாரர்கள் யூதர்களோடு சேர்ந்து ஆராதித்து வந்தார்கள். இப்போது பவுலோ - பேதுருவோ பிரசங்கம் செய்யவேண்டும். 16 மொழிகளுக்கும் மொழிபெயர்ப்பாளர்களை ஏற்பாடு செய்ய முடியாது. அகவே அந்த காலத்தில் எல்லா நாடுகளுக்கும் **பொது மொழியாக கிரேக்க பாஷை** இருந்ததது. கிரேக்க பாஷை அங்குள்ள 16 பாஷைகாரர்களும் விளங்கும் . (இப்போது **ஆங்கிலம் பொது மொழியாக** இருக்கிறது. உலக நாடுகளில் உள்ளவர்கள் ஆங்கிலத்தில் பேசினால் புரிந்துகொள்வார்ள்) அன்று **கிரேக்க பாஷையில்** பிரசங்கம் நடந்தப்படியால் கொரிந்து சபையில் இருந்த 16 பாஷைக்காரர்களும் விளங்கிக்கொண்டார்கள். பிரசங்கம் முடிந்தது.

அடுத்தது **ஜெப நேரம்** பிரசங்கத்தில் உணர்த்தபட்டவர்கள், ஆராதனையில் கலந்துகொண்ட 16 பாஷைகாரர்களும் ஜெபிக்க தொடங்குகிறார்கள். ஜெபிக்கும்போது அவரவர்கள் தங்கள் தாய் மொழியிலதான் ஜெபிப்பார்கள, அதற்கு **மொழிபெயர்ப்பு** தேயைில்லை. உதாரணமாக **ஹிந்தியில்** ஒருவன் ஜெபிக்கிறான். அருகில் உள்ள **தமிழன்** ஹிந்தியில் ஜெபிக்கிறவனை குறிப்பிட்டு இவன் என்ன பேசுகிறான் என்று விளங்கவில்லை என்று கூறினால் பவுல் என்ன பதில் கூறுவார். அவன் உனக்கு விளங்காத **அன்னிய பாஷையில்** பேசுகிறான். (தமிழனுக்கு **ஹிந்தி அன்னிய மொழி** - ஹிந்தி பேசுபவனுக்கு **தமிழ் அன்னிய மொழி**) ஆகவே அந்த ஜெப நேரத்தில் யாரும் யாருக்கும் மொழிபெயர்ப்பு செய்யவேண்டிய அவசியம் இல்லை. அவன்தன் சொந்த பிரச்சனைகளை குறித்து கர்த்தரிடம் பேசுகிறான். அவன் ஜெபத்தில் கூறும் பிரச்சனையை நீ ஏன் அறிந்துகொள்ளவேண்டும்? அதனால்தான் **இரகசியம்** என்றும் **பரவசப்பேச்சு** என்றும் ஆங்கிலத்தில் (Mysteries) என்றும் பலவாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக ஜெப நேரத்தில் அவனவன் தன் தாய் மொழியில் ஜெபிக்கும்போது சபையில் உள்ள மற்ற பாஷைகாரனுக்கு அது **அன்னிய பாஷை** அதற்கு **மொழிபெயர்ப்பு** அவசியம் இல்லை என்று விளங்கிக்கொள்ளலாம்.

இப்போது **பெந்தேகோஸ்தே சபையினர்** ஜெப நேரத்தில் **உளருவது அன்னிய பாஷை அல்ல.** தாங்கள் ஒன்றையே திருப்பி திருப்பி பேசுவது அவர்களுக்கே தெரியும். அவர்கள் அறியாவிட்டாலும் அருகே உள்ளவர் அல்லது **மனைவி பிள்ளைகள்** நிச்சயம் அறிவார்கள். **க்ரபலா! சங்கரபலா! தோ! தோ!** இப்படி எத்தனை காலம் உளரியடி உங்களை நீங்களே **ஏமாற்றிகொள்வீர்கள்.** அதையே உங்கள் **பிள்ளைகளும்** பின்பற்றியாக வேண்டும். இல்லையானால் உங்கள் **பிள்ளைகள்** அபிஷேகம் பெறவில்லை. உங்கள் **மனைவி** அபிஷேகம் பெறவில்லை என்று **பரிசுத்த மேஜையில்** (திருவிருந்தில்) பங்கு கொள்ளக்கூட அனுமதிக்கபடமாட்டார்கள்.

அன்னிய பாஷை பேசாததால் ஒரு குடும்பத்தை சபையில் தீண்டத்தகாதவர் போல் ஒதுக்கியே வைத்துவிட்டனர்.

ஆனால் மாதம் ஒருமுறை **பாஸ்டர்** கையில் **தசமபாகம்** சபை மக்கள் கொடுக்கும்போது ஒதுக்கப்பட்டவர்களும் வரிசையில் வரும்போது அதை **பாஸ்டர்** வாங்கிக்கொள்வார். அந்த பணத்துக்கு **அபிஷேகம் தேவையில்லை.**

திருமணத்தில் **வரதட்சனை** (டவுரி) யாக கொடுக்கும் **பணத்துக்கும்** கூட கணக்கு போட்டு தசமபாகம் என்ற கேட்டு வாங்கும் பாஸ்டர்கள் **சபைகள்** எத்தனை உண்டு என்ற எனக்கு தெரியும். அந்த வரதட்சனை பணமாக இருந்தாலும் கருப்பு பணமாக இருந்தாலும் **திருட்டு பணமாக** இருந்தாலும் அதை **கொடுப்பவர்கள்** இரட்சிக்கப்பட்டவர்களா? அபிஷேகிக்கப்பட்டவர்களா? என்ற **எந்த பாஸ்டர்மாரும்** கேட்பதில்லையே! ஏன்? இன்றைய கிறிஸ்தவ சபைகள் யாவும் **திருப்பதி உண்டியல்போல** ஆகிவிட்டது. அந்த பணத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாரா? அந்த பாஸ்டரை கர்த்தர் ஆசீர்வதிப்பாரா? எனன்று இவர்கள் யோசிப்பதில்லை.

இப்படி பல சபைகளில் நடப்பதை நானே பார்த்திருக்கிறேன். மற்ற பெந்தேகோஸ்தே சபைகளில் **பெட்டியில்** கவரில் பெயர் எழுதி போடவேண்டும் அல்லது **பையில் கவரில் பெயர் எழுதி** போடவேண்டும். இதை சபை ஒழுங்கு என்பார்கள். ஆனால் இதில்தான் **பாஸ்டர்களின்** பலவீனம் தெரியும் இந்த மாதம் யாருடைய **தசம பாகம்** வரவில்லை என்பதை தெளிவாக இவர்கள் அறிந்தும்கொள்ளலாம்.

ஆகவே நான் கூற விரும்புவது என்னவென்றால் **அன்னிய பாஷை** வரம் அதை ஆண்டவர்தான் நமக்கு கொடுக்க முடியும் அது **எல்லாருக்கும் கொடுக்ககூடியது அல்ல.**

**உதாரணமாக பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவம்**

இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த தேவன் அழைத்த **மோசேக்கு** தேவையான வரம் பேச்சு வரம்ஆகும். ஏனெனில் மோசே **கொன்னைவாயன். திக்குவாயன், வாக்குவல்லமை** இல்லாதவன், **மந்த நாவுள்ளவன்.**

அது மட்டுமல்லாமல் பலவிதமான **ஜாதிகளினூடாக** இஸ்ரவேலர்களை வழிநடத்தும் அவனுக்கு. **பற்பல பாஷை** வரங்களும் அவசியம்.

ஆகவே

**பேச்சு வரமும்** பாஷை **வரமும்** அவனுக்குத் தேவை என்று அவன் ஆசைப்படுவதிலே அர்த்தமுண்டு, நாமும் அதை ஒத்துக்கொண்டு அந்த **வரங்கள்** அவனுக்குக் கிடைத்தால் நல்லது என்று ஆசிப்போம்.

ஆனால்

ஞானமுள்ள தேவன் மோசேக்கு **பேச்சு** வரத்தையும் **பாஷை** வரத்தையும் அவனுக்குக் **கொடாமல்** ஆரோன் "உன்னோடு வருவான், நீ அவனோடே பேசி **அவன் வாயில் வார்த்தைகளைப போடு**, நான் **உன் வாயிலும் அவன் வாயிலும்** இருந்து நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன். **அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோட பேசுவான்** , இவ்விதமாய் அவன் உனக்கு **வாயாக இருப்பான்.** என்று சொல்லிவிட்டாரே

யொழிய அவனுக்கு மிகத் தேவையான பேச்சு வரங்களை கர்த்தர் கொடுக்க வில்லையே! யாத் 4:10-16

பவுல் கூறுகிறார் **அன்னிய பாஷை** மிக முக்கியமான வரம் இல்லை. இப்படியிருக்க **மேலான வரங்களை** முக்கியமான வரங்களை **நாடுங்கள்** என்கிறார் அப்படியானால் **அன்னிய பாஷை முக்கியமான வரம் இல்லை** என்பதாகும். 1 கொரி 12:29-31

எல்லாரும் அப்போஸ்தலர்களா?
எல்லாரும் தீர்க்கதிரிசிகளா?
எல்லாரும் போதகர்களா?
எல்லாரும் அற்புதங்களை செய்கிறவர்களா?
எல்லாரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களா?
எல்லாரும் அன்னிய பாஷை பேசுகிறார்களா?
எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?

அப்படியானால் எல்லாரும் **அன்னிய பாஷை பேச கூடாது** என்று அர்த்தம். வேத புஸ்தகம் எழுதப்படாத காலத்துக்குமுன் சபைக்கு **அன்னிய பாஷையும்** அதற்க்கான வியாக்கியானமும் **வரமாக** அருளப்பட்டது. அன்றைய சூழ்நிலைக்கு அன்றைய சபைக்கு அன்னிய பாஷை வரம் தேவை என்று கர்த்தர் கண்டார். ஆனால் இப்போது **முழுவேதமும்** கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய பாஷையிலும் கிருபையாக மொழிபெயர்த்து வேதத்தை நம் கையில் தந்தருளியதால் அதிலேயே **சகல உபதேசங்களையும்** சொல்லி கொடுத்துவிடுகிறார்.

**நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.** 1 கொரி 13:10

**பரிசுத்த ஆவியானர் நம்மை நிறைக்கும்போது வெளி அடையாளம் என்ன ?**

**பெந்தேகோஸ்தே** சபியனர் **கைகளை** தட்டுவார்கள். **துள்ளுவார்கள்** தலையை **வேக வேகமாக ஆட்டுவார்கள்.** சிலர் **உருளுவார்கள்.** சிலர் தொண்டை கிழிய **சத்தம் போட்டு கூக்குரல் யிடுவார்கள்.** சிலர் **கீழே விழுவார்கள்.** குறிப்பாக பெண்களிடம் தான் **கீழே விழுதலையும், உளருதலையும்** அதிகமாக காணலாம். அவர்கள் **வஸ்திரங்கள்** விலகுவதுகூட தெரியாமல் உருளுவார்கள். இதற்க்காகவே பல சபைகளில் **பெட்ஷீட்கள்** போர்வைகள் தயாராக வைத்திருப்பார்கள் **அருவருப்பான அந்த காட்சியை** ஆண்கள் பார்க்கக்கூடாது என்பதற்கதாக அந்த ஏற்பாட்டை செய்வார்கள். எதற்கு இந்த அவதி ?

வேத புத்தகத்தில் இல்லாத இப்படிப்பட்ட செயல்களை **புற மதத்தினர்** மத ஊர்வலங்களில் காணலாம். ஆனால் நம் வேதத்தில் எங்காவது பரிசுத்தாவியானவர் இறங்கினதால் மேலே குறிப்பீட்ட **ஆர்ப்பாட்டங்கள்** காணப்பட்டதாக வாசித்திருக்கிறீர்களா?


சில ஊழியர்கள் ஊதுவார்கள், மக்கள் **கீழே விழுவார்கள்.** சில ஊழியர் விரல் நீட்டுவார்கள் முன்னால் உள்ளவர் கீழே விழுவார்கள் தலையில் கை வைப்பார்கள் அப்படியே **பின்புறமாக** விழுவார்கள். இவைகளை பரிசுத்த அவியானவர் வேத்தில் ஒரு இடத்திலும் செய்யவில்லை. இது பரிசுத்த ஆவியானவரின் கிரியையே இல்லை. இப்படி செய்யும் ஊழியர்கள் அனைவரும் மாயமாலக்காரர்கள் அல்லது கள்ள உபதேசிகள் என்ற தைரியமாக கூறலாம்.

☐ பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நிறைய **தவறான உபதேசங்கள்** பெந்தேகோஸ்தே சபைகளிலும். **பெரிய ஸ்டார் ஊழியர்கள்** மூலமாகவும் **TV சேனல்கள்** மூலமாகவும் கூறப்படுகின்றன. இவர்கள் **கையிலிருந்து** வசனம் அறிந்த கொஞ்ஜ விசுவாசிகளையாவது காப்பாற்றலாம் என்பதற்காகவே பல வருடங்களாக என் பத்திரிகையில் இவைகளை எழுதி எச்சரித்து வருகிறேன்.

☐ சகோ. **மோகன் C. லாசரஸ்** நடத்தும் மாத இதழில் சகோதரி **லீனா அவினாஷ்** என்பவர் **வேத ஆராய்ச்சி** என்ற பெயரில் **பாஷைகளை வியாக்கியானம் செய்தல்** என்ற தலைப்பில் மிக மிக **அபத்தமாக** எழுதி வருகிறார். அதை வாசித்த வாலிப பிள்ளைகள் எத்தனைபேர் அந்த **தவறான உபதேசத்தை**பின்பற்றி வசனத்தைவிட்டு **விலகிபோகப் போகிறார்களோ?** மனம் மிகவும் வேதனையாக இருக்கிறது ! அதன் ஆசிரியரின் **அன்னிய பாஷையே** தவறு , ஜெபத்தில் அவர் **பெயர்கள் அழைக்கும்** ஊழியமும் தவறு. அவரின் இப்படிப்பட்ட உடன் ஊழியர்கள் எப்படி இருப்பார்கள்!

**அன்னிய பாஷை** பற்றிய அவரின் தவறான உபதேசத்தையே பின்பற்றி அதையே மற்றவர்களுக்கு அறிவித்து **மூளை சலவைசெய்து** வசனத்தை விட்டு விலக்கி **வாலிப பிள்ளைகள்** விரும்பும் **பரவச அனுபவத்துக்கு** கொண்டுபோகிறார்கள்.

இந்த படத்தில் காண்பது **அன்னிய பாஷை வரமாம். நாக்கில் நெருப்பு,** உபதேசத்தில் **உளரல்** வாலிப உலகம் என்ன ஆகுமோ? தெரியவில்லை.! அவர் எழுதிய தன் ஆராய்ச்சி கட்டுரை முழுவதிலும் அவரின் அனுபவங்களைத்தான் உபதேசமாக மாற்றி அதற்கு கவர்ச்சியான பெயர்களை வைத்துக்கொள்கிறார்கள். இவர்கள் **பேசும் அன்னிய பாஷையே** போலியானது அதற்கு ஒரு **வியாக்கியானம்** என்று எழுதி போலியான சந்தோஷத்தை கொடுக்க முயற்சிக்கிறார்கள். அவர் எழுதிய ஆராய்ச்சி பகுதியில இரண்டு **வசனங்கள் மட்டும்** குறிப்பிட்டிருக்கிறார் தவிற மற்ற எல்லாம் **கற்பனை அனுபவங்கள்** ஆகும்.




அவைகள் யாவும் **வசன அடிப்படை** அல்லாதவை. அவர் தொடர்ந்த எழுதும்போது ஒருவர் சபையில் **அன்னிய பாஷை** பேசியவுடன் **நீங்கள் ஒரு செய்தியை** சொல்ல வேண்டுமானால்..... **இரண்டு மூன்று வார்த்தைகள் தெரிந்தால்கூட** பரவாயில்லை. நீங்கள் வாயை திறந்து பேசும்போது பரிசுத்த ஆவியானவர் அந்த செய்தியை உங்கள் மூலமாக வெளிபடுத்தி காண்பிப்பார். ...

**அன்னிய பாஷையை** ஒருவர் பேசினஅளவு நீங்கள் **வியாக்கியானம்** கூற **வேண்டியதில்லை.** எந்த செய்தியை ஆவியானவர் **கூற விரும்புகிறாரோ** அதை அந்த **சூழ்நிலைக்கேற்ப** சொல்லுவதுதான் **வியாக்கியானம் வரமாகும்.** என்று அந்த சகோதரி எழுதியிருக்கிறார். இந்த ஆலோசனை **வேத புத்தகத்தில்**

எந்த பாகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்ற யாராவது கூற முடியுமா? ஒருவர் **ஒரு மணி நேரம்** அன்னிய பாஷை பேசினாலும் நீங்கள் அதற்கு ஒரு மணி நேரம் வியாக்கியானம் கூற வேண்டியதில்லை **15 நிமிடத்திலேயே முடித்துவிடலாம்.** என்ன **ஒரு கற்பனை ஆராய்ச்சி** அதற்கு சுட்டிக்காட்டும் வசனம் 1 கொரி. 14:13,14. இந்த வசனங்களுக்கும் இவர் ஆராய்ச்சியில் கூறப்பட்டிருக்கும் **விளக்கத்துக்கும்** துளியாவது **சம்பந்தம் இருக்கிறதா? வியாக்கியான வரத்திற்காக ஜெபிக்க வேண்டும்** என்று பக்கம் 30ல் எழுதியிக்கிறார். வேதத்தில் **வியாக்கியான வரத்துக்காக ஜெபிக்க வேண்டும்** என்று வேதத்தில் எங்காவது எழுதியிருக்கிறதா?

நீங்கள் **அன்னிய பாஷையில்** பேசும்போது **ஜீவனுள்ள** நதி உங்களுக்குள்ளிலிருந்து பாய்ந்து செல்லவிட்டுக்கொடுங்கள். அன்னிய பாஷையில் ஜீவனுள்ள நதி புறப்பட்டுவரும் என்பதை இவருக்கு யார் கற்றுக்கொடுத்தார்களோ? தெரியவில்லை.

இந்த ஜாமக்காரனை பல **பெந்தேகோஸ்தே பாஸ்டர்கள்** வாசித்திருக்கிறார்கள். யாராவது **ஒரு பாஸ்டராவது** இவர் எழுதியது **எந்த வசன** ஆதாரத்தில் எழுதினார் என்பதை எனக்கு எழுதி அனுப்ப முடியுமா ?

**வேத ஆராய்ச்சி** கட்டுரை எழுதுபவர்கள் கொஞ்ஜமாவது வேதாகம கல்லூரியில் படித்த அடிப்படை அறிவு வேண்டும். **தவறான உபதேசத்தை** பின்பற்றும் ஊழியர்கள் கூறிய இதைப்போன்ற **கற்பனை அனுபவங்களை** கல்லூரி படிப்பு படிக்கும் கல்லூரி மாணவர்கள் அல்லது கல்லூரி ஆசிரியர்களிடம் இப்படிப்பட்ட விஷயங்களை **வேத ஆராய்ச்சி கட்டுரை** என்ற கவர்ச்சி பெயர் சூட்டி வளரும் விசுவாசிகளை தயவுசெய்து கெடுத்துவிடாதீர்கள். இன்றைய வாலிப உலகம் ஒருபக்கம் உணர்ச்சிபூர்வமான **பரவச உபதேசங்களை** விரும்பினாலும் இதில் பெரும்பாலானவர்கள் மூளை அறிவுள்ள **ஆவிக்குரிய ஞானமும்பெற்றவர்களான** ஒரு கூட்டம் உண்டு. அவர்கள் நீங்கள் எழுவதை அப்படியே தலை ஆட்டி செல்பவர்கள் அல்ல ! கேள்வி கேட்பார்கள் ! கண்டிப்பாக நீங்கள் பதில் கூறியாக வேண்டும்.

இவர்கள் கேள்வி கேட்காமல் போனாலும் இவர்களின் பெற்றோர்களில் வசனப்படி **இரட்சிக்கப்பட்ட சரியான விசுவாசிகள்** கொஞ்ஜ பேராவது இருப்பார்கள். அவர்களில் சிலராவது இவர்களை கேள்வி கேட்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஏஞ்ஜல் TVயில் சகோ சாது செல்வராஜ் அவர்களின் **கற்பனை கதைகளைவிட** உங்கள் **ஆராய்ச்சி கட்டுரையில்** கற்பனைகளயும் அதிகம். ஜாக்கிறதை ! கர்த்தருக்கு கணக்கு கொடுக்க வேண்டிவரும். உங்கள் வாசகர்களின் கூட்டத்தில் என் ஜாமக்காரனை வாசிக்கும் ! வாசகர்கள் கூட்டமும் உண்டு. அவர்களை காப்பாற்றவும் அவர்களுக்கு விழிப்புணர்வு உண்டாகவுமே இதை எழுதுகிறேன்.

மேலே நான் சுட்டிக்காட்டிய வேத அராய்ச்சின் என்ற பெயரில் எழுதியபடி ஏராளமான புஸ்தகங்கள் **அன்னிய பாஷைப்பற்றி** வெளிவந்திருக்கின்றன. வாசகர்கள் மிகவும் ஜாக்கிறதையாக நீங்கள் வசனத்தில் வளரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு வெளி அடையாளம்

வெளியடையாளம் **அன்னிய பாஷை அல்ல. கனிகள், சாட்சியுள்ள ஜீவியம்தான் வெளியடையாளம் ஆகும்.**

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பரிசுத்தாவி உங்கள் மேல் வரும்போது **பெலப்பட்டு,** புறப்பட்டு, **சாட்சியாயிருப்பீர்கள்** என்பதுதான் அடையாளம் .

மேலும் இயேசு கூறினார் நீங்கள் எருசலேமிலும், யூதேயாவிலும் சமாரியாவிலும் பின் **பூமி எங்கும் எனக்கு சாட்சியாயிருங்கள்** என்றுதான் கட்டளை கொடுத்தார்.

☐ பவுல் **கலாத்திய சபைக்கு** கடிதம் எழுதும்போது கலா. 5:22,23 **ஆவியின் கனியோ**

| | | |
|---|---|---|
| அன்பு | சந்தோஷம் | சமாதானம் |
| நீடிய பொருமை | தயவு | நற்குணம் |
| விசுவாசம் | சாந்தம் | இச்யைடக்கம் (சுய கட்டுப்பாடு) |

ஆகிய மேற்கண்ட **சுபாவங்கள்தான்** பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு **வெளிப்படையாளமாக** கூறப்பட்டுள்ளது.

சத்தம், கூச்சல், நடனம், **கைகளை** தட்டுதல் **அன்னிய பாஷை** என்ற பெயரில் உளருவது அல்ல.

மேலே குறிக்கப்பட்ட சுபாவங்கள் **வெளி அடையாளமாக** யாரிடம் **காணப்படவில்லையோ** அவர்களுக்கு **பரிசுத்த ஆவியானவரின் நிறைவு** இல்லை என்று திட்டவட்டமாக கூறலாம். அப்படிப்பட்டவர்கள் **மனம் திரும்புவும் இரட்சிக்கப்படவும்** இல்லை என்றும் திட்டவட்டமாக கூறலாம்.

கடைசியாக ஒரு அடையாளத்தை கவனியுங்கள்

இந்தியாவில் கேரளாவில் கும்பநாடு என்ற ஊரிலும் தமிழ்நாட்டில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஊர்களில்தான் பெந்தேகோஸ்தே சபைகள் மிக அதிகமாக உண்டு.

இந்த பெந்தேகோஸ்தே சபைகளிலிருந்து ஒரு மிஸனரியையாவது இந்த சபைகள் வட இந்தியாவில் உள்ள ஆதிவாசிகளிடம் சுவிசேஷம் அறிவிக்க அனுப்பியிருக்கிறார்களா?

மிஷனரிகளாக சென்ற ஆயிரக்கணக்கானவர்கள் எல்லாரும் CSI போன்ற சபைகளிலிருந்துதானே சென்றிருக்கிறார்கள். ஏறக்குறைய 10000 சபைகளை காட்டு ஆதிவாசிகளுககாக உருவாக்கி அவர்களுக்கு வேத பாடம் சொல்லிக்கொடுத்து அந்த ஆதிவாசிகளே பாஸ்டர்களாக உருவாக்கி அவர்கள் சபைகளை நடத்துகிறார்கள்.

இப்போது சொல்லுங்கள் ஆவியானவர் பெந்தேகோஸ்தே சபை மக்களுக்குள்ளேயா? CSI போன்ற சபைகளில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்குள்ளேயா?

நீங்களே உங்களை அராய்ந்து பாருங்கள். உண்மையாய் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெற்றவர்கள் ஆத்துமாக்களுக்காக அலைவார்கள். தசம பாகத்துக்காக அல்ல. அன்னிய பாஷை என்ற பெயரில் உளரி தங்களை தாங்களே சந்தோஷம் அனுபவிக்கவும் அல்ல! **கிறிஸ்துவின் சிந்தையே** உங்களில் இருக்கக்கடவது.*(- தொடரும்...)*

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



**Dr. SAMRAJ SAMUEL,**

**Dr. SAMRAJ SAMUEL,** M.B.B.S., அவர்கள் 2019 செப்டம்பர் மாதம் நல்ல ஓட்டத்தை முடித்து சகல ஆயத்தத்தோடும் தன் ஆவியை கர்த்தரிடம் ஒப்புவித்தார்.

L.E.F. (சகோ. ஜோ டேனியல் சபை) சபையின் முதல் மிஷனரி டாக்டர் என்ற பெயர்கொண்டவர். L.E.F. சபை தூண்களில் ஒருவராக செயலபட்டவர். ஆத்தும் ஆதாயமே முக்கியம் என்ற பாரத்தில் M.B.B.S. படிப்பை முடித் உடனேயே கர்த்தருக்கென்று ஊழியம் செய்ய தொடங்கிவிட்டார்.

மேலும் எங்கள் (Tribel Mission) டிரைபல் மிஷன் ஊழியத்தில் **ஆனைகட்டியில்** பெத்தனி ஆஸ்பத்திரி தொடங்குமுன் **அட்டப்பாடி** காடுகளுக்குள் **அகழி** என்ற பகுதியில் **இரண்டு சகோதரிகள்** மிஷனரிகளாக அமர்த்தி அந்த வனத்தில் ஊழியத்தை துடங்கினோம். அப்படியே அங்குதான் **முதல் ஆஸ்பத்திரி** ஆரம்பிக்கப்பட்டது. அந்த சமயத்தில்தான் Dr. சாம்ராஜ் அவர்கள் என் ஊழியத்தில் மிகவும் உதவி செய்தார். வாரத்தில் இரண்டு நாள் **மேட்டுப்பாளையத்திலிருந்து** ஆனைக்கட்டி வழியாக **அட்டப்பாடி** வந்து அங்கிருந்து **அகழி காட்டுக்குள்** மலையேறி நடந்துவந்து **ஆதிவாசிகளுக்கு** இலவசமாக வைத்தியம் செய்து அன்றே கோயத்முத்தூர் திரும்பிவிடுவார். அப்போதெல்லாம் எங்களுக்கு இலவசமாக கிடைக்கும் மருந்துகள் மிகமிக குறைவாகவே இருக்கும். ஆகவே நான் Dr. புஷ்பராஜ் **சேலத்திலிருந்து** கோயமுத்தூர் வந்து அங்குள்ள **மெடிக்கல் ஸ்டோரில்** தேவையான **ஊசி மருந்துகள்,** மாத்திரைகளை நானே **என் சொந்த செலவில்** விலைக்கு வாங்கி அட்டைபெட்டிகளில் வைத்து இரண்டு கைகளிலும் நானே சுமந்துகொண்டு, பஸ் ஏறி **அகழி** காட்டுக்குள் கொண்டு சென்று சேர்ப்பேன். அப்போது **டிரைபல் மிஷனுக்கு** வாகன வசதி எதுவும் இல்லாத காலம். **Dr. சாம்ராஜ், Dr. முதளிதர்** ஆகியவர்கள் போகாத நாட்களில் நான் சென்று **ஆதிவாசிகளுக்கு** வைத்தியம்செய்து அன்று மாலையே நானும் சேலம் திரும்பிவிடுவேன். இரவு **யானை கூட்டங்கள்** மிகுதியாக உலாவுவதால் அரசாங்க பஸ்களை அந்த நாட்களில் இரவு 7-00 மணி அல்லது 8-00 மணிக்குள் நிறுத்திவிடுவார்கள். ஆகவே கடைசி பஸ் பிடிக்க **காட்டில் இறங்கி** ஓடி சென்று பஸ்சை பிடிக்க வேண்டியிருக்கும். அன்றைய ஆரம்ப காலத்தில் **Dr. முரளி** அவர்கள் **கொல்லத்திலிருந்து** (Quilone) **காரில்** வாரம் இரண்டு முறை அகழி கிளினிக்குக்கு வந்து போவார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் Dr. சாம்ராஜ் அவர்களும் கஷ்டம் பாராமல் அந்த **அகழி** ஆஸ்பத்திரிக்கு வந்து **ஆதிவாசிகளை** சந்திப்பார். ஒவ்வொரு நோயாளிக்கும் இயேசுவைப்பற்றி கூறாமல் **ஊசி** போடமாட்டார். அவர் **பஸ் பிரயான செலவுக்காக** பணம் கொடுத்தாலும் அவர் வாங்கமாட்டார். Dr. முரளி அவர்கள் வற்புறுத்தியும் பணம் வாங்கவில்லை. நீங்களும் Dr. புஷ்பராஜ் அவர்களும் எத்தனை **நூறுமைல்கள்** பிரயாணம் செய்து இந்த காட்டுக்குள் உள்ள ஆதிவாசி மக்களை **சந்திக்கவரும்போது** கோயமுத்தூரிலிருந்து வருவது எனக்கு அத்தனை தூரம் அல்லவே. இந்த ஊழியத்துக்கு என் ஒரு சிறு பங்களிப்பக நான் வந்து போகிறேன் என்பார். இப்படிப்பட்ட தன்னலம்பாராமல் வருமானம் எதிர்பாராமல் **Dr. சாம்ராஜ்** அவர்களின் ஊழியம் எங்களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரியாக இருந்தது.



**Dr. சாம்ராஜ்** அவர்கள் பஸ் ஸ்டான்டில் கார்த்திருக்கும் போதும் பஸ்ஸில் ஏறி அமர்ந்த பின்னும் **இயேசுவைப்பற்றி** அறிவிக்காமல் அவர் வீடு திரும்பியதில்லை. தனது 88வது வயதில் **சர்க்கரை வியாதியால்** ஒரு கால்வெட்டி எடுக்கபட்ட நிலையில் முறுமுறுபில்லாமல் **கர்த்தரின் சாட்சியாக** வாழ்ந்து தன் ஓட்டத்தை முடித்தார். மகனின் குடும்பமும் சாட்சியுள்ள குடும்பம் . வெல்லூர் CMCயிலிருந்து அவர் உடல் பெங்களூரில் உள்ள மகன் வீட்டுக்கு கொண்டு போகப்பட்டு அங்கு மெத்தடிஸ்ட் சபையில் அடக்கம் செய்யப்பட்டது.

அவரின் மனைவி கடந்த வருடம் கர்த்தரிடம் சேர்ந்தார்.

L.E.F. தலைமை சபையில் உள்ளவர்கள் Dr. சாமராஜ் போன்றவர்களிடமிருந்து படிக்க வேண்டிய பாடம். பின்பற்ற வேண்டிய **தாழ்மை** போன்ற **நல்ல தலைமை குணங்கள்** நிறைய உணடு.

**Dr. சாம்ராஜ்** அவர்களின் மருத்துவ சேவையோடு கூடிய அவரின் **நல்ல ஊழியங்களுக்காக,** ஆத்தும ஆதாய ஊழியங்களுக்காகவும் தேவனை துதிப்போம். கர்த்தர் தாமே Dr. சாம்ராஜ் அவர்களின் பிள்ளைகளின் குடும்பங்களுக்கு ஆறுதலையளிக்க ஜெபிப்போம்.

Tribel Mission சார்பிலும் Dr. முரளிதர் அவர்கள் சார்பிலும் என் தனிப்ட்ட சார்பிலும் அவர் குடும்பத்துக்கும் அவர் சபை மக்களுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

# இந்தியாவில் மத கலவரம் உண்டாகும் ஆபத்து...

இந்தியாவில் உள்துறை அமைச்சரின் பயங்கர திட்டம். 2019 செப்டம்பர் மாதம் 14ம் தேதி அன்று மோடியின் ஆஸ்தான ஆலோசகரும். இந்தி மொழி வெறியும், இந்துத்துவா என்ற இந்துமத கொள்கை, இந்தியா முழுவதும் கொண்டுவரும் கருத்து திணிப்போடு அவர் நிகழ்த்திய பேச்சு இந்தியா முழுவதும் பெரும் சர்சையை உண்டாக்கியுள்ளது.

1. ஒரே நாடு - ஒரே கல்வி
2. ஒரே நாடு - ஒரே வரி ( Tax )
3. ஒரே நாடு - ஒரே ரேஷன்
4. ஒரே நாடு - ஒரே தேர்தல்
5. ஒரே நாடு - ஒரே பொது சட்டம்
6. ஒரே நாடு - ஒரே எலக்ஷன்
7. ஒரே நாடு - ஒரே ஹிந்தி மொழி
8. ஒரே நாடு - ஒரே மதம்

மேலே வாசித்த அமித்ஷாவின் தீவிரமான கொள்கை திணிப்புக்கு இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. அவர் கட்சியின் BJP, RSS இயக்கத்தில் உள்ளவர்களே இது இந்தியாவின் ஒற்றுமையை சீர்குலைக்கும், பெருத்த ஆபத்தை உண்டாக்க போகிறது என்கிறார்கள்.

ஒரே ரேஷன் என்றால் வடஇந்தியாவில் பெரும்பாலானவர்கள் கோதுமை உபயோகிக்கிறார்கள். அது அவர்களின் பிரதான ஆகாரம். ஆனால் அதுவே அரிசி மட்டுமே சாப்பிட்டு பழக்கம் உள்ள தென்இந்திய மாநிலங்களான ஆந்திரா, கர்னாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் ரேஷன் கடைகளில் கோதுமையை சாப்பிடு என்றால் எப்படி சாப்பிடுவார்கள்?.

சுமார் 1800 மதங்கள்உள்ள இந்தியாவில் ஒரே மதம்தான் இந்திய பொது மதமாக எப்படி ஏற்றுக்கொள்வார்கள். இது நடைமுறைக்கு வந்தால் கிறிஸ்தவர், இஸ்லாமியர், புத்த மதத்தினர் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இது ஜனநாயக நாடு, அவரவர்கள் விரும்புகிற தெய்வத்தை ஆராதிக்கும் சுதந்திரம் நீக்கப்பட்டால் பெரும்விளைவுகளை இந்தியா சந்திக்க நேரிடும்.

இந்தியாவில் சுமார் 4000 மொழிகள் பேசப்படுகிறது. இந்தி மொழிதான் பேசவேண்டும் என்றால் இது நடக்கும் காரியமா? இந்தியா முழுவதும் குறிப்பாக தமிழ்நாடு, கேரளாவில் வேண்டுமென்றே ஹிந்தி மட்டுமே பேச தெரிந்த நபர்களை ரயில்வே ரிசர்வேஷன் கவுண்டர்களிலும், டிக்கட் கவுண்டர்களிலும், ரயிலில் டிக்கட் பரிசோதகராகவும் ஆட்களை திணித்தால் கிராம மக்கள் தங்கள் ஊருக்கு பயணிக்க டிக்கட் கேட்டால் தமிழ் விளங்காத ரயில்வே ஊழியர் எப்படி டிக்கட் கொடுப்பார்.

ஹிந்தி மொழி மட்டுமே தெரிந்த நபரால் அல்லவா தமிழ்நாட்டில் இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில்கள் ஒரே தண்டவாளத்தில் நேருக்கு நேர் மோத இருந்தது. இன்ஜின் லோக்கோ பைலட்டுகளால்(டிரைவர்களால்) பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

சர்வாதிகார ஆட்சிக்கு வித்திடப்படுகிறது. ஜாக்கிறதை, கிறிஸ்தவ விசுவாசிகள் மிகவும் பாரத்தோடு ஜெபிக்க கேட்டுக்கொள்கிறேன்.



## வாழ்த்துகிறோம்.

ஆற்காடு லூத்தரன் சபைகளில் மறை மாவட்டத்தின் (ALC) 8வது பிஷப்பாக Rev. **சாமுவேல் கென்னடி** அவர்கள் கடந்த 2019 ஆகஸ்ட் மாதம் 21ம் தேதி பிஷப் Rt.Rev. **ராஜா சாக்ரட்டீஸ்** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். பிஷப் Rt. Rev. SAMUEL KENNEDY அவர்களை ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும் **என் சார்பிலும்** வாழ்த்துக்கள் தெரிவிக்கிறோம்.

நான் என் உயர்நிலைப்பள்ளி படிப்பை **திருவண்ணாமலை டேனிஷ் மிஷன்** உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது Rt. Rev. **துரைராஜ் பீட்டர்** அவர்கள் அப்போது ஆயராக பணியாற்றினார். அப்போது அவர் என்னை **கிராம ஊழியத்துக்கு** ஒவ்வொரு வாரமும் அழைத்து சென்று எனக்கு **முதல் கிராம ஊழிய பயிற்சியை** அளித்தோடல்லாமல் அன்றே வேத புத்தக சந்தேகங்களை அவரிடம் கேட்பேன். நான் **சிறுவன்** என்று என்னை **அலட்சியப்படுத்தாமல்** மிக அருமையாக சந்தேகங்களுக்கு விளக்கம் கொடுப்பார். அவர்தான் எனக்கு **திடப்படுத்தலையும்** அளித்தார். நான் **CSI** சபையை சேர்ந்தவன் என் தகப்பனார் **CSI சபையில் செயலாளர்** என்றாலும் **என் பெற்றோரின்** அனுமதியுடன் திடப்படுத்தலை சபையில் அங்கு எடுத்தேன். அந்த கால **நன்றியுள்ள நினைவுகள்** காரணமாக **ALC ஆற்காடு லூத்தரன்** சபைகளை குறித்து எனக்கு பாரம் உண்டு. கர்த்தர் **ALC சபைகளை சமாதானத்துடன் வழி நடத்துவாராக.**

**NOVEMBER - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.